# <u>மாநகராட்சி</u>
## <u>17.10.2024 அன்று நடைபெற்ற இயல்பு கூட்ட பொருள்களின் தீர்மானங்கள் விபரங்கள்</u>

**1438)திரு. அ. ஜான்பீட்டர், தெற்கு மண்டல தலைவர் மற்றும் 33வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களால் கொண்டு வரப்படும் இரங்கல் தீர்மானங்கள்**

கடந்த சில மாதங்களுக்கு முன்பாக உடல் நலக்குறைவால் காலஞ்சென்ற திராவிட முன்னேற்ற கழக முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் மற்றும் முன்னாள் திட்ட குழு உறுப்பினர் திரு. ஹபீப் முகமது அவர்களுக்கு இம்மாமன்ற கூட்டத்தில் தனது இரங்கலை தெரிவித்துக்கொண்டார்.

மேற்கண்ட தீர்மானத்தினை திரு. ச. ராஜப்பா, மாண்புமிகு துணை மேயர் முன்மொழிந்தும், திருமதி. ஜோ. இளமதி, மாண்புமிகு மேயர் அவர்கள் அதனை வழிமொழிந்தும் ஒருமனதாக இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

**1)** திண்டுக்கல் மாநகராட்சி வருவாய் நிதி 2022-23 ன் கீழ் நேருஜி நகர் பூங்காவில், நடைபாதையில் பதிக்கப்பட்டுள்ள பழுதடைந்த Anti skid tiles கற்களை புதிப்பிக்கவும், புதியதாக தடுப்புச் சுவர் கட்டுவதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 625000/- க்கு 30.03.2023 ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் மதிப்பீட்டினை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த எஸ்.பி.டி பில்டர்ஸ் நிறுவனத்திற்கு 24.04.2023 ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டு மாமன்றத் தீர்மானம் எண் 1000 நாள் 31.05.2023ல் பின்னேற்பு பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. இப்பணியில் சுற்றுச் சுவரின் உயரம் குறைவாக உள்ளதால் சுவரின் மேலே முள்கம்பியிலான வேலி அமைக்கவும், கூடுதலாக கழிப்பிடம் கட்டவும் தேவைப்படும் கூடுதல் செலவினம் ரூ.300000 ஆகும். இப்பணியின் அவசர அவசியம் கருதியும், ஒப்பந்தபுள்ளி கோரி பணி மேற்கொள்ளுவதால் ஏற்படும் கால தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு இப்பணிக்கான திருத்திய மதிப்பீடு ரூ.925000/-க்கு ஒப்புதல் வேண்டப்படுகிறது. மேலும் இப்பணியினை மேற்கொண்டு வரும் எஸ்.பி.டி பில்டர்ஸ் திண்டுக்கல் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்ளவும் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

ந.க.எண் 086 / 2022 /இ4

**அ.குறிப்பு**

1) அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண்.1439</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**2)** மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.397/அ3/2021 நாள்:16.07.2024ம் தேதிய ஒருகிணைந்த குழந்தைவளர்ச்சி திட்டத்தின் கீழ் அங்கன்வாடி மையங்கள் (Baby Friendly Toilet) குழந்தை நேய கழிப்பறைகட்டும் பணிக்கு 8 இடங்களுக்கு தலா ரூ 36,000/- வீதம் ரூ.2,88,000/-க்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எனவே திண்டுக்கல் மாநகராட்சியில் கீழ்க்காணும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | கக்கன் நகர் அங்கன்வாடி மையங்களில் குழந்தை நேய கழிப்பறை புதிது கட்டுதல் (மைய எண் 33612040207) (Baby Friendly Toilet) | 36,000/- |
| 2 | சுக்கான்மேடு திருமலைசாமிபுரம் (வ) அங்கன்வாடி மையங்களில் குழந்தை நேய கழிப்பறை புதிது கட்டுதல் (மைய எண் 33612040207) | 36,000/- |
| 3 | சுக்கான்மேடு கிழக்குதெரு அங்கன்வாடி மையங்களில் குழந்தை நேய கழிப்பறை புதிது கட்டுதல் (மைய எண் 33612040222) | 36,000/- |
| 4 | மேட்டுப்பட்டி காளியம்மன் கோயில் தெரு அங்கன்வாடி மையங்களில் குழந்தை நேய கழிப்பறை புதிது கட்டுதல் (மைய எண் 33612040403) | 36,000/- |
| 5 | நத்தர்ஷா தெரு அங்கன்வாடி மையங்களில் குழந்தை நேய கழிப்பறை புதிது கட்டுதல் (மைய எண் 33612040409) | 36,000/ |
| 6 | ஓரியண்டல் பள்ளி அங்கன்வாடி மையங்களில் குழந்தை நேய கழிப்பறை புதிது கட்டுதல் (மைய எண் 33612040411) | 36,000/ |
| 7 | சவேரியார் பாளையம் அங்கன்வாடி மையங்களில் குழந்தை நேய கழிப்பறை மராமத்து பணி (மைய எண் 33612040422) | 36,000/ |
| 8 | சவேரியார் பாளையம் நேருஜி நகர் அங்கன்வாடி மையங்களில் குழந்தை நேய கழிப்பறை கழிப்பறை மராமத்து பணி (மைய எண் 33612040424) | 36,000/ |

ந.க.எண். 06343 / 2024 / இ4,

அலுவலக குறிப்பு:

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 1440** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**3)** திண்டுக்கல் மாநகராட்சி வார்டு எண் 18 உட்பட்ட ரவுண்ட் ரோடு பகுதியில் வசூல் மையம் கட்டும் பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூபாய் 5,70,000ற்கு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப மற்றும் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்பள்ளிகள் கோரப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டன. பணியில் மதிப்பீட்டில் இடம்பெறாத ஒரு சில பணியிடங்கள் கூடுதலாகவும் மிகவும் அவசியமானதாகவும் கருதப்பட்டன இதன் பொருட்டு உயரதிகாரிகள் உத்தரவு பெறப்பட்டு பணிகள் மேற்கொண்டதில் மதிப்பீட்டில் இருந்து கூடுதலாக புதிய இணையதள வசதிகள் செய்தல் மற்றும் புணரமைத்தல் பணி ஆகியவை அவசர அத்தியாவசியமும் கருதியும் மேற்கொண்டமையால் மதிப்பீட்டில் இருந்து கூடுதலாக தொகை ரூ.1,73,559 /- செலவிடப்பட வேண்டி உள்ளது. மேற்படி மதிப்பீட்டின் கூடுதலாக உள்ள திருத்திய மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 7,43,559/- மேற்கொள்ள ஒப்பந்ததாரருக்கு திருத்திய மதிப்பீட்டுத் தொகைக்கும் மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது. மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க.எண்.853/ 2023 / இ4)

**அ.குறிப்பு**

1) நிர்வாக அனுமதி வழங்கலாம். கூடுதல் ரூ. 1,73,559/- வழங்கலாம்.

2) திருத்திய மதிப்பீடு ரூ. 7,43,559 /- ற்கு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1441** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**4)** திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திண்டுக்கல் மாநகராட்சிக்கு எதிராக தொடரப்படும் நகரமைப்பு பிரிவு சார்ந்த (எப்1, எப்2, எப்3) வழக்குகள் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்குகள், சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை வழக்குகள் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வழக்குகளில் ஆஜராகும் இம்மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களுக்கு வழக்காடும் கட்டணங் கள் 2024-2025 –ம் நிதியாண்டு முதல் பொது நிதியில் இருந்து வழங்க உத்தேச செலவீனம் ரூ. 5,00,000/- செலவீனம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 8664/2021/எப்1)**

**அலுவலககுறிப்பு..**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**5)** இம்மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.22, மெயின் ரோடு வரதராஜ் காம்ப்ளக்ஸில் அமையப்பெற்றுள்ள தேனி ஆனந்தம் பட்டு சென்டர் பிரைவேட் லிமிட் மற்றும் தேனி ஆனந்தம் சில்க்ஸ் & ரெடிமேட்ஸ் பிரைவேட் லிமிட் நிறுவனத்தின் கட்டிடத்திற்கு இம்மாநகராட்சியால் பின்வரும் விபரப்படி 9 வரிவிதிப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **வரி விதிப்பு எண்** | **தொகை** |
|---|---|---|
| 1 | 078/022/900190 | 355156 |
| 2 | 078/022/900191 | 355156 |
| 3 | 078/022/900192 | 361296 |
| 4 | 078/022/900193 | 355156 |
| 5 | 078/022/900194 | 354160 |
| 6 | 078/022/900195 | 366444 |
| 7 | 078/022/900196 | 355156 |
| 8 | 078/022/900197 | 378700 |
| 9 | 078/022/902114 | 78892 |
| **மொத்தம்** | | **29,60,116** |

2) மேற்கண்ட வரிவிதிப்புகளில் சூழப்பட்ட தொகையினை கடந்த 2022-23ம் நிதியாண்டில் செலுத்திட கோரி இம்மாநகராட்சியால் கடந்த 22.03.2022ம் தேதி ஜப்தி வாரண்ட் இறுதி அறிவிப்பு அனுப்பியதை தொடர்ந்து 26.03.2023ல் வரித்தொகை செலுத்தப்பட்டது.

3) அதனை தொடர்ந்து 2023-24ம் நிதியாண்டிற்கான வரித்தொகையினை கடந்த ஆண்டினை போலவே ஜப்தி அறிவிப்பு வழங்கி வசூல் செய்யக்கூடும் என்பதால் தனியரால் (தேனி ஆனந்தம் பட்டு சென்டர் பிரைவேட் லிமிட் மற்றும் தேனி ஆனந்தம் சில்க்ஸ் & ரெடிமேட்ஸ் பிரைவேட் லிமிட்) திண்டுக்கல் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 193/2023ல் இம்மாநகராட்சி ஆணையாளரை 6ம் பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்ட வழக்கில் இம்மாநகராட்சியால் மேற்படி நிறுவனத்தினரை இம்மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரித்தொகைக்கு ஜப்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ள கூடாது என உறுத்து கட்டளை பிறப்பிக்கக் கோரப்பட்டும், அதனை தொடர்ந்து சமர்ப்பிக்கப்பட்ட இடையீட்டு மனு எண். 424 (அசல் வழக்கு 193/2023) மனுவில் அசல் வழக்கு முடிவடையும் வரை எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என தற்காலிக உறுத்து கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) மேற்கண்ட வழக்கில் இம்மாநகராட்சி சார்பாக ஆஜராகிட திரு. சந்திரசேகரன், மாமன்ற வழக்கறிஞரிடம் மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி வழக்கு ஒப்படைக்கப்பட்டமைக்கும், மேற்கண்ட வழக்கிற்கான வழக்காடல் உத்தேச கட்டணம் ரூ. 15000/-ற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.5264 / 2023/ அ2)

**அலுவலகக்குறிப்பு..**

1. அனுமதிக்கலாம்.

2. உத்தேச செலவினம் ரூ. 15000/-ஐ வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 1443** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**6)** இம்மாநகராட்சி 78 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நமது மாநகராட்சி பள்ளியான நேருஜி நினைவு நகரவை மேல்நிலைப்பள்ளி மற்றும் மேட்டுப்பட்டி முனிசிபல் உயர்நிலைப்பள்ளி ஆகிய இரு பள்ளிகளிலும் முதல் மூன்று மதிப்பெண்கள் மற்றும் தமிழில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு கீழ்கண்டவாறு பரிசு தொகை வழங்கப்படுகிறது.

பத்தாம் வகுப்பு

| வ எண் | பெயர் | மதிப்பெண்கள் | பள்ளி விபரம் | பரிசுத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | கே. சுரேந்தர் | 475/500 | நேருஜி நினைவு பள்ளி | 5000/- |
| 2 | சி. துர்க்கா | 476/500 | மேட்டுப்பட்டி உயர்நிலைப்பள்ளி | 5000/- |
| 3 | சி.ஷான் ரியான் | 460/500 | நேருஜி நினைவு பள்ளி | 3000/- |
| 4 | எஸ். முகமது ஜூபேர் | 474/500 | மேட்டுப்பட்டி உயர்நிலைப்பள்ளி | 3000/- |
| 5 | டி. சஞ்சய் | 444/500 | நேருஜி நினைவு பள்ளி | 2000/- |
| 6 | என். முகமதுசாயின் | 451/500 | மேட்டுப்பட்டி உயர்நிலைப்பள்ளி | 2000/- |

பன்னிரெண்டாம் வகுப்பு

| வ எண் | பெயர் | மதிப்பெண்கள் | பள்ளி விபரம் | பரிசுத் bjhif (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | எச். | 550/600 | நேருஜி | 5000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஜஸ்வின்ராஜ் | | நினைவு பள்ளி | |
| 2 | ஆர். கார்த்திக் | 540/600 | நேரூஜி நினைவு பள்ளி | 3000/- |
| 3 | எஸ். மௌலி சிவம் | 505/600 | நேரூஜி நினைவு பள்ளி | 2000/- |

தமிழில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ/ மாணவிகள்

| வ எண் | பெயர் | மதிப்பெண்கள் | பள்ளி விபரம் | பரிசுத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | கே. சுரேந்தர் | 98/100 | நேரூஜி நினைவு பள்ளி | 2000/- |
| 2 | எச். ஜஸ்வின்ராஜ் | 97/100 | நேரூஜி நினைவு பள்ளி | 2000/- |
| 3 | சி. துர்க்கா | 98/100 | மேட்டுப்பட்டி உயர்நிலைப்பள்ளி | 2000/- |

மேற்கண்ட பரிசுத் தொகையான ரூ. 36,000/- கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி வேண்டியும் மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.7472/2024/சி5)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து பணிகளை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 1444</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**7)** திண்டுக்கல் மாநகராட்சியில் TNCRUDP மற்றும் அம்ருத் 2.0 ன் கீழ் திண்டுக்கல் மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் கீழ்கண்ட திட்டப்பணிகளை நேரடியாக மேற்பார்வையிடுவதற்கும், பட்டியல் தயார் செய்தல் மற்றும் கண்காணிப்பதற்கும் திட்டமேலாண்மை ஆலோசகர்களைத் தேர்வு செய்தல் மற்றும் நியமனம் செய்யும் (Project Management Consultancy) பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு ரூ. கோடியில் |
|---|---|---|
| 1 | திண்டுக்கல் மாநகராட்சியில் (5 வருட செயல்பாடு மற்றும் பராமரிப்பு உட்பட) விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை (UGSS) திட்டப்பணி | 118.90 |
| 2 | திண்டுக்கல் மாநகராட்சியில் 14.60 MLD திறன் கொண்ட STP (DBOT அடிப்படையில்) கட்டுதல் பணி | 36.00 |
| 3 | திண்டுக்கல் மாநகராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டுகளில் பைலட் முறையில் 24 x 7 குடிநீர் திட்டப்பணி | 9.00 |
| | மொத்தம் | 163.90 |

கடந்த13.03.2024 அன்று முதல் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றன.

| | |
|---|---|
| 1) | AD-WIN Engineering and Consultancy, chennai |
| 2) | Samrath Infra Tech Services Pvt Ltd |
| 3) | Capital Engineering Consultancy Chennai Pvt Ltd |

வரப் பெற்ற மூன்று ஒப்பந்தப் புள்ளிகளில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே தொழில் நுட்ப ரீதியாக தகுதி வாய்ந்தது என ஒப்பந்தப்புள்ளிதிறனாய்வு குழுவினரால் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 15.03.2024அன்று ஒப்பந்ததாரர்களின் விலை விகித ஒப்பந்தப்புள்ளி (Price Bid) திறக்கப்பட்டு, ஒப்பு நோக்குப் பட்டியல் (Comparative Statement) தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1) | AD-WIN Engineering and Consultancy | 38140000.00 | 2.17 % மதிப்பீட்டை விட கூடுதல் |
| 2) | Samrath Infra Tech Services Pvt Ltd | 44980000.00 | 2.57 % மதிப்பீட்டை விட கூடுதல் |

வரப்பெற்ற இரு விலை விகிதங்களுமே நிர்ணயம் செய்த மதிப்பீட்டை விட கூடுதலாக ஒப்பந்ததாரர்களால் வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து மதிப்பீட்டை விட 2.17% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள தி/ள்AD-WIN Engineering and Consultancy, ஒப்பந்ததாரரிடம் விலை விகிதத்தை குறைத்து தர 18.06.2024 ல் அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் மேற்படிதி/ள்AD-WIN Engineering and Consultancy,28.06.2024 அன்று விலைக்குறைப்பிற்கு பின்னர் 2.00% கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளியினைஒப்பு நோக்குப் பட்டியல்

(Comparative Statement) தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 1) | AD-WIN Engineering and Consultancy | 36800000.00 | 2.00 % மதிப்பீட்டிற்கு சதவீதம் |

எனவே பணியின் அவசர அவசியம் கருதியும், நிர்ணயிக்கப்பட்ட காலகெடுவிற்குள் திட்டப்பணியினை விரைந்து முடிக்க வேண்டியுள்ளதாலும் PMC க்கு மதிப்பீட்டிற்கு 2.00% ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s AD-WIN Engineering and Consultancy, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(**ந.க.எண் . 01241 / 2024 / இ4** )

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) ஷை பணிக்கு இரண்டு ஆண்டுகளில் அல்லது பணி முடியும் தருவாயில் வரைரூ.175.00 + ரூ.175.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.350.00 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்குநிர்வாக அனுமதி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 000425 / 2024/ WB, நாள் 30.01.2024 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.
2) எனவே மதிப்பீட்டிற்கு 2.00 சதவீதம் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள AD-WIN Engineering and Consultancy, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்கலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதியும், திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும், ஒப்பந்ததாரர் AD-WIN Engineering and Consultancy,, அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
4) மேற்படி தமிழ்நாடு காலநிலைமாற்றம் நகர்புற அபிவிருத்தி திட்டம்TNCRUDP திட்டம் விடுபட்ட பகுதியில் பாதாளசாக்கடை திட்டப்பணி, கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம் கட்டுமான பணிமற்றும் அமருத் 2.0 24x7 மாதிரி குடிநீர் விநியோகப் பணிகள்ஆகியவற்றை திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் அலுவலகம் அமைத்து தேவையான தொழில்நுட்ப அலுவலர்களை நியமனம் செய்து தினசரி பணியை கண்காணித்து, அளவீடு செய்தல், அதனை பதிவுசெய்தல், பணிமுன்னேற்ற அறிக்கை வழங்குதல், இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்படும் பணிகள்தொய்வு இல்லாமல் செய்து முடிக்கPMC (Project Management Consultancy) AD-WIN Engineering and Consultancy நியமனம் செய்து அதற்குரிய தொகையை பொது நிதியில் இருந்து வழங்கவும் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.1445</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**8)** திண்டுக்கல் மாநகராட்சியில் தினசரி நடைபெறும் முக்கிய நிகழ்வுகள் மாண்புமிகு மேயர், மாண்புமிகு துணை மேயர் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் ஆகியோரின் ஆய்வுகூட்டங்கள் மற்றும் கள ஆய்வுப் பணிகள் ஆகியவற்றை புகைப்படம் எடுத்து பதிவு செய்வதற்கு தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் புகைப்படம் எடுப்பவர் செய்யும் பணிக்கு ஒரு மாதத்திற்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.24000/- ஆகும். இப்பணிக்கு பிப்ரவரி 2024 முதல் டிசம்பர் 2024 வரை உள்ள காலத்திற்கு மட்டும் 29.01.2024 விலை புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று விலை புள்ளிகள் வரப்பெற்றது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விலை புள்ளி கோரிய தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | திரு .ப.கோபால கிருஷ்ணன், திண்டுக்கல் | ரூ.24000/- |
| 2 | திரு .ச.ஹரிஹர சுப்ரமணியன், திண்டுக்கல் | ரூ.28000/- |
| 3 | திரு .ச.மாரியப்பன், திண்டுக்கல் | ரூ. 30000/- |

வரப்பெற்ற மூன்று உள்ளூர் விலை புள்ளிகளில் குறைந்த விலை புள்ளி அளித்துள்ள திரு .ப.கோபால கிருஷ்ணன், அவர்களின் ரூ.24000/-க்கான விலை புள்ளியை ஏற்று, திண்டுக்கல் மாநகராட்சி வருவாய் நிதியின் மூலம் பணிகளை மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மேற்கூறிய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியினை கடந்த 29.01.2024ல் பெறப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட முன் அனுமதிக்கு மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெற பொருள் வைக்கப்படுகிறது.

ந.க.எண். 3308 / 2024 / இ4,

அலுவலக குறிப்பு:

(அ) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ஆ) மாமன்றத்தின் முன் அனுமதி எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.1446**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**9)** திண்டுக்கல் மாநகராட்சி மூலதன மான்ய நிதி 2021 – 22 ன்கீழ் திண்டுக்கல் மாநகராட்சியில் பாரதிபுரம் சந்தை சாலையில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்டு கடந்த 05.01. 2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி மூலமாக திறந்துவைக்கப்பட்டது. மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்: 1573/2023/B2 நாள்;29.12.2023 -ல் திண்டுக்கல் மாநகராட்சியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு FUSION MANPOWER & INFRA SERVICES நிறுவனத்தினர் மூலம் 1 நூலகரை 1 வருடகாலத்திற்கு தற்காலிகமாக நியமிக்கவும் அந் நூலகருக்கு மாதம் ஊதியம் FUSION MANPOWER & INFRA SERVICES மூலமாக தொகை வழங்கிட பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே மாநகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்கப்பட்ட செலவின தொகைக்கும் இனிவரும் காலங்களில் வழங்கப்பட்ட வேண்டிய மாதம் ஊதியம் மாநகராட்சி கல்விநிதி 2024-2025 -ன் கீழ் வழங்கிடவும் உத்தேசசெலவினம் 1 வருடத்திற்க்கு ரூ.3.60 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 02688 / 2024 / இ4

அலுவலக குறிப்பு:

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மான எண். 1447</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**10)** திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட 48 வார்டுகளிலும் அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள், ஆய்வுக் கூட்டங்கள், ஸ்தல ஆய்வகள் மற்றும் மாநகராட்சி அறிவிப்புகள் ஆகியவற்றை சமூக ஊடகங்களான Twitter, Face book, Whats app, Instagram மற்றும் சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். மேலும் பொதுமக்களிடம் இருந்து சமூக ஊடகம் மற்றும் வலை தளங்கள் மூலமாக வரப்பெறும் குறைகளை தொடர்ந்து கண்காணித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மேற்கண்ட பணிகளை தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி நிர்வகிக்கவும், பராமரிக்கவும் மாதம் ஒன்றிற்கு ரூ.1.00 இலட்சம் வீதம் ஒரு வருடத்திற்கு ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் சமூக ஊடக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

( **ந.க.எண். 620 / 2023 / இ4)**

**<u>அ.குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி வருவாய் நிதி 2024-25 ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.1448</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**11)** இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் தொடக்கப்பள்ளி 14, நடுநிலைப்பள்ளி- 1, உயர்நிலைப்பள்ளி -1 மற்றும் மேல்நிலைப்பள்ளி-1 ஆகமொத்தம் 17 பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் வாசிப்பு திறன் மேம்படுத்துதல், ஆங்கில புலமை மேம்படுத்துதல் மேலும், அறிவியல் ஆராய்ச்சிக்கு வித்திடும் விதமாக மாணவர்கள் நலன்கருதி, 17 பள்ளிகளுக்கு Young World பத்திரிக்கை வாரம் 210 பிரதிகளை ரூ.10/- வீதம் 35 வாரங்களுக்கு (23.08.2024 முதல் 18.04.2025 முடிய) தி ஹிந்து நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும், அதற்காகும் உத்தேச செலவினம் (10x210x35) ரூ.73,500/-ம், மற்றும் வகுப்பு ஆசிரியர்களுக்கு Week end Education வாரம் ஒரு பிரதியாக மொத்தம் 17 பிரிதிகளை 35 வாரங்களுக்கு தி ஹிந்து நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும், அதற்காகும் உத்தேச செலவினம் (25x17x35) ரூ.14,875/-ஐ ஆக உத்தேச செலவினம் ரூ.90,000/- (ரூபாய் தொண்ணூறாயிரம்)ஐ இம்மாநகராட்சி சொத்துவரியிலிருந்து சேகரமாகும் கல்வி வரியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 9479/2023/எச்2)**

<u>**அலுவலக குறிப்பு**</u>

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத் தொகை ரூ.90,000/-ஐ இம்மாநகராட்சி சொத்துவரியிலிருந்து சேகரமாகும் கல்வி வரியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மான எண்.1449**</u> அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**12)** திண்டுக்கல் மாநகராட்சியில் பெரும்பாலான பகுதிகளில் கால்வாய்கள் தூர் வாரப்படாமல், கழிவுகள் கால்வாய்களில் சேர்ந்து ஆங்காங்கே அடைபட்டு கழிவுநீர் கால்வாயில் தேங்கியிருந்ததும் மழை நேரங்களில் நீர் சாலைகளில் தேங்குவதும், நேராய்வில் கண்டறியப்பட்டது. அவற்றை அவசர மற்றும் அத்தியாவசியம் கருதி உடனடியாக நிவர்த்தி செய்யும் பொருட்டு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாநகர ஆணையர் ஆகியோரின் அறிவுரைப்படி ஜேசிபிகொண்டு செய்யக்கூடிய பணிகளை இயந்திரங்களைக் கொண்டும், அவற்றால் சேகரமான கழிவுகள் மற்றும் மண்களை டிராக்டர்களைக் கொண்டும் அப்புறப்படுத்தும் பணியும் ஜேசிபி இயந்திரத்தால் செய்ய இயலாத பணிகளை நேரடியாக பணியாளர்களை அமர்த்தி செய்யவும் அறிவுறுத்தப்பட்டதன் பேரில் திரு. ராமலிங்கம் காண்ட்ராக்டர், தி/ள்.

ராம் நிவாஸ் ஏஜென்சி, நிறுவனத்தின்பணியாளர்கள் மூலமாக வெளிமுகமையில் பணிமேற்கொள்ளப்பட்டது. இப்பணியானது 07.03.2024 முதல் 06.06.2024 வரை பணி முடிவுற்ற நிலையில் பொது சுகாதாரம் தொடர்பான குறைகள் மற்றும் பொதுமக்களின் புகார்களை நிவர்த்தி செய்ய ஏதுவாக மேலும் 3 மாதங்களுக்கு 07.06.2024 முதல் 06.09.2024 வரை 90 நாட்களுக்கு பணி நீட்டிப்பு செய்வதற்கான உத்தேச மொத்த செலவினத் தொகை ரூபாய் 36.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணி விவரம் | உத்தேச செலவினத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பகுதி 1 முதல் 6 வரை உள்ள பொது சுகாதார பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் குறுகிய சாலைகளில் உள்ள கழிவுநீர் ஓடைகளில் தேங்கியுள்ள மண்ணை அகற்றி அப்புறப்படுத்தும் பணி | ரூ.18.00 |
| 2 | பகுதி 7 முதல் 12 வரை உள்ள பொது சுகாதார பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் குறுகிய சாலைகளில் உள்ள கழிவுநீர் ஓடைகளில் தேங்கியுள்ள மண்ணை அகற்றி அப்புறப்படுத்தும் பணி | ரூ.18.00 |
| | மொத்தம் | ரூ.36.00 |

மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் இப்பணியை நீட்டிப்பு செய்ய துப்புரவு ஆய்வர், துப்புரவு அலுவலர், மாநகர் நல அலுவலர் ஆகியோரின் குறிப்பின்படி முன் அனுமதி எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அவசர மற்றும் அத்தியாவசிய பணி கருதி 1.) திரு. இராமலிங்கம், ஒப்பந்ததாரர், திண்டுக்கல் (பிரிவு 1 முதல் 6 வரை) 2.) திரு.ராம் நிவாஸ் ஏஜென்சி ஒப்பந்ததாரர், திண்டுக்கல் (பிரிவு 7 முதல் 12 வரை) கால நீட்டிப்பு செய்யவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1810 / 2024/இ4

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண். 1450</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**13)** திண்டுக்கல் மாநகராட்சிக்கு அலுவலக உபயோகத்திற்கு 2024-25ம் ஆண்டிற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், மற்றும் கணினி ரசீதுகள் முதலியவற்றை வாங்கிக் கொள்ள 2024-2025ம் ஆண்டு உத்தேச வரவு செலவு மதிப்பீட்டு அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ரூ.20.00 லட்சம் (ரூபாய் இருபது இலட்சம்)

தொகைக்கு உட்பட்டு வாங்கிக் கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.6975/2024/டி1).

**அலுவலக குறிப்பு..**

1. ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி படிவங்கள், பதிவேடுகள் மற்றும் கணினி ரசீதுகள் அச்சடித்து வழங்க கூட்டுறவு அச்சகங்கள் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 1451** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**14)** திண்டுக்கல் மாநகராட்சிக்கு அலுவலக உபயோகத்திற்கு 2024-25ம் ஆண்டிற்கு தேவையான கணினி உபகரணங்கள் மற்றும் எழுதுபொருட்கள் முதலியவற்றை 2024-2025ம் ஆண்டு உத்தேச வரவு செலவு மதிப்பீட்டு அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ரூ.10.00 லட்சம் (ரூபாய் பத்து லட்சம்) தொகைக்கு உட்பட்டு கணினி வாங்கிக் கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.5799/2022/டி1).

**அலுவலக குறிப்பு..**

1. ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி கணினி உபகரணங்கள் மற்றும் எழுதுபொருட்கள் வாங்குவதற்கு உள்ளூர் நிறுவனங்கள் மூலம் விலைப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1452**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**15)** திண்டுக்கல் மாநகராட்சியில் வருவாய் நிதி 2023-24 இன் கீழ் ஏஎம்சி சாலையிலிருந்து பேருந்து நிலையம் வரை சாலை பாதுகாப்பு உபகரணங்கள் அமைக்கும் பணிக்கு 14.09.2023 அன்று இரண்டாவது முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ. எண் | ஒப்பந்தக்காரரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.அமல்ராஜ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.7600/- மதிப்புள்ள வங்கி செலுத்து சீட்டு நகல் |
| 2. | திரு.டி.முருகேசன் | 4.06% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.7600/- மதிப்புள்ள கருவூல செலுத்து சீட்டு நகல் |

இரண்டாவது அழைப்பில் ரூ.7,60,000/- மதிப்பீட்டில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.02% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.அமல்ராஜ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மற்றும் வேலை உத்திரவு வழங்கியதற்கு ஒப்புதல் அளிக்கலாம். (**ந.க.எண். 853 /2023/ இ4)**

**அலுவலக குறிப்பு**

1. திரு.எஸ்.அமல்ராஜ், ஒப்பந்ததாரர் அவர்களின் 0.02% மதிப்பீட்டை விட குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கு மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண். 1453** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

16) இம்மாநகராட்சியின் 48 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் கொசுவினால் பரவக்கூடிய டெங்கு, மலேரியா போன்ற நோய்களை தடுக்கும்பொருட்டும், தற்போது தென்மேற்கு பருவமைழை தொடங்கியுள்ளதாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள இம்மாநகராட்சிக்கு ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் 90 பணியாளர்களை வழங்கிவரும் கூடு டிரஸ்ட், திண்டுக்கல் என்ற நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 10.06.2024 உடன் முடிவடைவதாலும், ஏற்கனவே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி நிறுவனத்தாருக்கு 11.06.2024 முதல் 10.09.2024 வரை மூன்று மாத காலத்திற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் விநியோகம் செய்திட அனுமதி வழங்கலாம். அதற்கான உத்தேச செலவினம் ரூ.42,00,000/-த்திற்கு மாமன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண். 3022/2023/எச்2)**

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1454** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

17) இம்மாநகராட்சியின் நகர்புற மலேரியா ஒழிப்பு திட்ட பணிகளின் மூலம் கொசுக்களால் பரவும் டெங்கு, சிக்குன்குனியா மற்றும் மலேரியா போன்ற தொற்று நோய்களை, தடுத்திட 48 வார்டு பகுதிகளிலும், 12 பிரிவுகள் வாரியாக கொசுவினால் பரவக்கூடிய டெங்கு, மலேரியா போன்ற நோய்களை தடுக்கும்பொருட்டும்,

பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைக்கிணங்க, வடகிழக்கு பருவமழை காலங்களில் காய்ச்சல் அதிகமாக பரவுவதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள கூடுதலாக 50 தூய்மைப் பணியாளர்கள் துப்புரவு ஆய்வரின் அறிக்கையின்படி, மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, ஏற்கனவே DBC களப்பணியாளர்களை விநியோகம் செய்யப்பட்டு வரும் கூடு டிரஸ்ட், நிறுவனத்தின் மூலம் மேலும் 50 நபர்களை 08.08.2024 முதல் 10.09.2024 வரை ஏற்கனவே உள்ள நிபந்தனைகளுக்குட்படுத்தி பணி உத்தரவு வழங்கிடவும், அதற்காகும் கூடுதல் உத்தேச செலவினம் ரூ.7,25,900/-ஐ இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3022/2023/எச்2)**

<u>**அலுவலக குறிப்பு**</u>

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மான எண். 1455**</u>அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**18)** திண்டுக்கல் மாநகராட்சியில் வருவாய் நிதி 2024 -25 இன் கீழ் வார்டு எண், 23 மினிபவர் பம்ப் மற்றும் கூடுதலாக சின்டெக்ஸ் அமைக்கும் பணி மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு 16.08.2024 அன்று முதல் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்தத்தாரரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.பி.செந்தில்குமார் | 0.77% மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.2500/- மதிப்புள்ள செலுத்து சீட்டு நகல் |
| 2. | திரு.கே.பொன்முருகன் | 28.21% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.2500/- மதிப்புள்ள செலுத்து சீட்டு நகல் |

முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு 0.77% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.செந்தில்குமார், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று

பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மேற்கூறிய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் அனுமதிக்கு எதிர்வரும் மாமன்றத்தில் அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

ந.க.எண். 01824 / 2024/ இ4

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

**தீர்மான எண். 1456** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

19) மாண்புமிகு. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 22.07.2024- திங்கள் காலை 11.00 மணியளவில், தலைமை செயலகம் சென்னையில், நடுத்தர மக்களின் வீடு கட்டும் கனவை எளிதாக்க தமிழ்நாட்டில் முதல்முறையாக கட்டிட அனுமதியை ஆன்லைன் மூலம் உடனடியாக வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்துள்ளார்கள். அதன் அடிப்படையில் அரசாணை (நிலை) எண். 94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள். 18.07.2024 வெளியிடப்பட்டது. அதன் விபரம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளதன் படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் – 2500 சதுரடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுரடி வரையிலான தரைத்தளம் (அ) தரைத்தளத்துடன் கூடிய முதல்தளம் குடியிருப்புக்கட்டிடங்கள் கட்டிட சுயசான்றின் அடிப்படையில் இணையவழி (Single Window Portal) கட்டிட அனுமதி வழங்குவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்கள் நிர்ணயம் செய்து 2024-25 –ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரின் போது, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் நிதிநிலை அறிக்கையில் பத்தி எண். 157-ல் அறிவிக்கப்பட்டது.

மேலும், ஒற்றைச்சாளர இணைய முகப்பின் மூலம் சுயசான்றின் அடிப்படையில் கட்டிட உரிமம் வழங்கும்போது கீழ்காணும் நடைமுறைகளை பின்பற்ற உரிய ஆணை வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் அரசைக்கோரியுள்ளனர்.

i) தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, சட்டப்பிரிவு 198, உட்பிரிவு (2)(xviii)-ல் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் கட்டணங்களை நிர்ணயம் செய்யலாம்.

ii) இச்சட்டப்பிரிவு 199 மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் விதிகள், 2023-ல் விதி 394-ன்படி நகர்புற

உள்ளாட்சி மன்றம் கட்டணம் நிர்ணயம் செய்வதிலிருந்து தளர்வு செய்யலாம்

iii) அரசாணை (நிலை) எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 04.02.2019-ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019-ல் நிர்ணயிக்கப்பட்ட சில கட்டணங்களை (Scrutiny Fee, Display Board Fee) வசூலிப்பதிலிருந்து விலக்களிக்கலாம்.

iv) ஒற்றைச்சாளர இணைய முகப்பின் (Single Windor Portal) மூலம் கட்டிட உரிமம் வழங்க மேற்குறிப்பிட்ட அட்டவணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கட்டணங்களை வகைப்படுத்தி உள்ளீடு செய்யலாம்.

v) சுயச்சான்று (Self Certification ) மூலம் கட்டிட உரிமம் ஒற்றைச்சாளர இணைய முகப்பின் (Single Window Portal) வழியாக பெற்றபின் காலிமனை வரி மற்றும் பாதாள சாக்கடை கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கலாம்

vi) சுயச்சான்று (Self Certification ) மூலம் கட்டிட உரிமம் பெற்றபின், கண்டறியப்படும் விதிமீறல்கள் மீது, தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிபந்தனை விதிக்கலாம்.

vii) இணைப்பில் உள்ளவாறு அனைத்து நிலைகளில் உள்ள நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டண விகிதங்களில் ஏதேனும் மாறுதல் செய்ய வேண்டி இருப்பின் தொடர்புடைய துறைத்தலைவர் அவர்களின் ஒப்புதலுடன் மாறுதல் செய்திடலாம்.

viii) குடியிருப்பு கட்டுமானம் 325 சதுர மீட்டருக்கு ( 3500 சதுரடி) மேல் உள்ள இனங்களுக்கு அந்தந்த நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில், தற்போது வசூலிக்கப்படும் கட்டண விகிதங்களை தொடர்ந்து வசூலிக்கலாம். மேற்கண்ட கட்டண விகிதங்கள் 325 சதுர மீட்டர் வரை உள்ள புதிய குடியிருப்பு கட்டுமானங்களுக்கு மட்டும் நிர்ணயம் செய்யப்படுகிறது.

கூடுதல் தலைமை செயலாளர்/ ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோரின் மேற்காணும் கருத்துருக்களை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப்பின், மேலே பத்தி 6ல்

குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்குட்பட்டு, தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, சட்டப்பிரிவு 198, உட்பிரிவு (2)(xviii)-ல் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், இணைப்பு I,II மற்றும் III –ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிலைகளில் உள்ள நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் 2500 சதுரடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுரடி வரையிலான குடியிருப்பு கட்டுமானத்திற்கு (தரைத்தளம் (அ) தரைத்தளத்துடன் கூடிய முதல்தளம்) சுய சான்றின் (Self – Certification) அடிப்படையில் ஒற்றைச்சாளர முறையில் (Single Window Portal) இணைய வழி கட்டிட அனுமதி (Online Building Approval) பெறுவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களைக் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது.

| 1. மாநகராட்சிகள் – குடியிருப்புக்கட்டுமானம் – கட்டண விபரம் | | | | |
|---|---|---|---|---|
| 325 ச.மீ வரை (3500 ச.அடி வரை) | | | ஒருங்கிணைந்த கட்டணம் | |
| வ.எண். | மாநகராட்சியின் நிலை | எண்ணிக்கை | ரூ/ச.மீ | ரூ/சதுரடி |
| 1) | சிறப்பு நிலை A மாநகராட்சிகள் | 3 | 950 | 88 |
| 2) | சிறப்பு நிலை B மாநகராட்சிகள் | 3 | 900 | 84 |
| 3) | தேர்வு நிலை மாநகராட்சிகள் | 5 | 850 | 79 |
| 4) | நிலை I மாநகராட்சிகள் | 3 | 800 | 74 |
| 5) | நிலை II மாநகராட்சிகள் | 6 | 800 | 74 |
| | கூடுதல் | 20 | | |

Annexure-II

Details of Corporations

| Sl.No | Name of the Corporation | Consolidated Fee | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | Rs.Per Sq.m | | | | Rs. Per Sq.ft |
| V. Grade II Corporation | | Building License | D.C | LWF | Total | |
| Dindigul | | 552 | 16 | 232 | 800 | 74 |

மேற்காணும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் சுய சான்று மூலம் கட்டிட உரிமம் பெறும் திட்டத்திற்கு மட்டுமே பொருத்தும்.

மேற்காணும் வழிகாட்டுதல்களை அனைத்து நகர்புற உள்ளாட்சி மன்றங்களின் பதிவிற்கு வைத்து செயல்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நிறைவுச்சான்றிதழ் தேவையின்றி, சுயசான்றிதழ் அடிப்படையில் கட்டிட அனுமதிகளை வழங்க ஏதுவாக ஒற்றைச்சாளர முறையில் ஒருங்கிணைக்கப்பட்ட புதிய தொகுதியில் 2500 சதுரடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுரடி வரையிலான தரைத்தளம் (அ) தரைத்தளம் மற்றும் முதல்தளத்துடன் கூடிய குடியிருப்புக்கட்டிடங்கள் கட்டுமானத்திற்கு சுயச்சான்றின் அடிப்படையில் (Self – Certification ) ஒற்றை சாளர முறையில் இணைய வழியில் கட்டிட அனுமதி பெறுவதற்கு மேற்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை உள்ளீடு செய்வதற்கு நகர் ஊரமைப்பு இயக்குநருடன் கலந்தாலோசித்து மேல்நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணை மற்றும் அதன் முழு விபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 6578/2024/எப்3)**

**அலுவலககுறிப்பு..**

மாமன்றம் பதிவு செய்யலாம் .

**தீர்மான எண். 1457** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது

---

20) வடகிழக்கு பருவ மழையினால் தொற்று நோய் பரவாமல் தடுக்க இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மைப் பணிகளுக்கு தேவையான கிருமி நாசினிகள் விநியோகம் செய்திடும் பணிக்கு 14.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்ட 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விபரம் | ஹெல்த்கேர் பார்மஸி, ஓம்சக்தி நகர், பழனி பைபாஸ், திண்டுக்கல் | திரு. பி. செந்தில்குமார், அக்ஷரா காண்ட்ராக்டர்ஸ், 42ஏ, கச்சேரி தெரு, மேற்குரதவீதி, திண்டுக்கல். |
|---|---|---|---|
| 1 | பிளிச்சிங் பவுடர் (கிலோ ஒன்றுக்கு) | ரூ. 43.75/- | ரூ. 43.00 |
| 2 | சுண்ணாம்பு (கிலோ ஒன்றுக்கு) | ரூ. 11.50/- | ரூ. 11.00/- |
| 3 | பினாயில் (லிட்டர் ஒன்றுக்கு) | ரூ.45.75/- | ரூ.45.00 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி. செந்தில்குமார், அக்ஷரா காண்ட்ராக்டர்ஸ், திண்டுக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியை அங்கீகரித்து விநியோக உத்தரவு வழங்கிட மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண்.12153/2023/எச்1)

**அலுவலக குறிப்பு**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியதை ஏற்கலாம்.

**தீர்மான எண். 1458** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

21)திண்டுக்கல் மாநகராட்சியில் வருவாய் நிதி 2024-25இன் கீழ் திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட 48 வார்டுகளிலும் அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள், ஆய்வுக் கூட்டங்கள், ஸ்தல ஆய்வுகள் மற்றும் மாநகராட்சி அறிவிப்புகள் ஆகியவற்றை சமூக ஊடகங்களான Twitter, Face book, Whats app, Instagram மற்றும் சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். மேலும் பொதுமக்களிடம் இருந்து சமூக ஊடகம் மற்றும் வலை தளங்கள் மூலமாக வரப்பெறும் குறைகளை தொடர்ந்து கண்காணித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பணி மதிப்பீடு ரூ.12.00 இலட்சத்திற்கு30.08.2024அன்றுமுதல் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1. | ZHOCOS, CHENNAI | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.12,000/- மதிப்புள்ள செலுத்து சீட்டு நகல் |
| 2. | BRAND NEW TECHNOLOGIES | 3.10% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.12,000/- மதிப்புள்ள செலுத்து சீட்டு நகல் |

முதல் அழைப்பில் வரப்பெற்றஇரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதி/ள் ZHOCOS, CHENNAI, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியைஏற்று பணி மேற்கொள்ளமாமன்றத்தின் அனுமதிபெறப்பட வேண்டும். மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மாமன்றத்தின்

அனுமதியினை எதிர்நோக்கி மேற்கூறிய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் அனுமதிக்கு எதிர்வரும் மாமன்றத்தில் பின்னேற்பு பெறவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

ந.க.எண். 620 / 2023/ இ 4

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண்.1459</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

22) திண்டுக்கல் மாநகராட்சியில் பள்ளி மேம்பாட்டு மானியம் மூலதனபணி 2024 -25 இன் கீழ் வார்டு எண்23, மேற்குரத வீதியில் உள்ள நகராட்சி தொடக்கப்பள்ளிக்கு இரண்டு வகுப்பறை கூடுதல் கட்டிடம் கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.25.00 இலட்சத்திற்கு 14.08.2024 அன்று முதல் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்தத்தாரரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.சி.செந்தில்குமார் | 0.25% மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.25000/- மதிப்புள்ள செலுத்து சீட்டு நகல் |
| 2. | திரு.எஸ்.அமல்ராஜ் | 1.06% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.25000/- மதிப்புள்ள செலுத்து சீட்டு நகல் |

முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு 0.25% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.செந்தில்குமார், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மேற்கூறிய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் அனுமதிக்கு எதிர்வரும் மாமன்றத்தில் பின்னேற்பு பெறவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது. ந.க.எண். 07293 / 2024/ இ 4

**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண். 1460</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

23) திண்டுக்கல் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி நிதி 2024-25 இன் கீழ் எட்டு அங்கன்வாடி மையங்களில் குழந்தைகள் நேய கழிப்பறைகள் கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.2.88 இலட்சத்திற்கு 14.08.2024 அன்று முதல் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்தத்தாரரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ்.அமல்ராஜ் | 0.47% மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.2880/- மதிப்புள்ள செலுத்து சீட்டு நகல் |
| 2. | திரு.சி. செந்தில்குமார் | 4.25% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.2880/- மதிப்புள்ள செலுத்து சீட்டு நகல் |

முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு 0.47% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.அமல்ராஜ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மேற்கூறிய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் அனுமதிக்கு எதிர்வரும் மாமன்றத்தில் பின்னேற்பு பெறவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

ந.க.எண். 06343 / 2024/ இ 4

**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண். 1461</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

24) தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயமுத்தூர் அவர்களின் கடிதத்தில், 2022-2023, 2023-2024 மற்றும் 2024-2025ம் நிதியாண்டுகளுக்கான இம்மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பயிற்சிக்கான வருடாந்திர பங்குத் தொகை ரூ.3.00 லட்சம் வீதம் மூன்றாண்டுகளுக்கு ரூ.9.00 லட்சம் இம்மாநகராட்சியிலிருந்து மேற்படி பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அரசாணை எண்.45 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 12.04.2023ன்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023ன்படி, மேற்காணும் மூன்றாண்டுகளுக்கு பங்குத் தொகை ரூ.9.00 லட்சத்திற்கான செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொண்டதை மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது

**(ந.க.எண். 624/2024/சி1)**

**<u>அலுவலக குறிப்பு..</u>**

மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**<u>தீர்மான எண். 1462</u>**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

25) திண்டுக்கல் மாநகராட்சி 48 வார்டுகளிலும் தூய்மை இந்தியா திட்டம் 2.0 (SBM 2.0) மற்றும் நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் (PMCC) மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், சமுதாய மற்றும் பொது கழிப்பறைகள், பராமரிப்பு பணிகள், பொது இடங்களில் மலம், ஜலம் கழிப்பதை முற்றிலும் தவிர்த்தல், கசடு கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை, கட்டிட கழிவு மேலாண்மை, பொது இடங்களில் உள்ள விளம்பர தட்டிகளை அகற்றுதல், நீர் நிலைகள் தூய்மையாக பராமரித்தல், வரலாற்று நினைவு சின்னங்களை பாதுகாத்தல் குறித்த பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி, நினைவு சின்னங்களை பாதுகாத்தல் குறித்த பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகள் குறித்து பொதுமக்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட மாண்புமிகு மேயர், மற்றும் துணை மேயர், மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி சபா உறுப்பினர்கள் வாயிலாக பொதுமக்கள், வணிக நிறுவன உரிமையாளர்கள், பள்ளி கல்லூரி மாணவர்கள், மற்றும் தன்னார்வலர்களுக்கு விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்துதல் மாணவர்களுக்கிடையே பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, நடத்தி பரிசுப்பொருட்கள் வழங்குதல், சிறப்பாக பணிபுரிந்தவர்களை தேர்வு செய்து பரிசு பொருட்கள் மற்றும் கேடயங்கள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.65,000/- (அறுபத்து ஐந்தாயிரம் மட்டும்)ஐ வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டியும் இப்பொருள் தொடர்பாக மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4996/2023/எச்1)

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.

2) மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து பணிகளை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 1463</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

26) திண்டுக்கல் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியான வேடபட்டி மின் மயான வளாகத்திற்குள் மரங்களை அகற்றும் பணியின் பொழுது வாகனம் மோதி மின் கம்பம் உடைந்து போனது, எனவே மேற்படி மின்கம்பத்திற்கான மதிப்பீட்டு தொகை ரூ.6693/- நாகல்நகர் மின் பிரிவுக்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2778/2024/இ3

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 1464** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

27) திண்டுக்கல் மாநகராட்சி மாண்புமிகு துணை மேயர் பயன்பாட்டு வாகனம் TN57BQ9779 - க்கு நான்காம் ஆயில் சர்வீஸ் பார்ப்பதற்கு உத்தேச செலவினம் ரூ. 8366./- வருவாய் நிதி 2024-2025 ன்கீழ் செலவினம் செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 6580/2024/இ3,

அலுவலக குறிப்பு:

மாமன்றம் அனுமதிவழங்கலாம்.

**தீர்மான எண். 1465** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

28) திண்டுக்கல் மாநகராட்சிபுதிய அலுவலக கட்டிடத்தில் L17572, L17573 ஆகிய இரு எண்ணம் மின் தூக்கிகளை பராமரிப்பு மேற்கொண்டமைக்கு நிலுவை கட்டணம் முறையே ரூ. 56700/- , ரூ. 75600/- ஆக மொத்தம் ரூ. 132300/- செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 8819/2020/இ3,

**அலுவலக குறிப்பு:**

மாமன்றம் அனுமதிவழங்கலாம்.

**தீர்மான எண்.1466** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

29) திண்டுக்கல் மாநகராட்சிமாண்புமிகு மேயர் பயன்பாட்டு வாகனம் TN57 BQ5959 க்கு 40,000 K.M வரை இயக்கப்பட்டதால் ஆயில் சர்வீஸ் மற்றும் பழுது நீக்கம் செய்யும் பணியை பார்ப்பதற்கு ஆகும் செலவினம் ரூ. 25481/- ஐ குடிநீர்நிதி 2024-25கீழ் அண்ணாமலைஸ் டயோட்டா ஏஜென்சிஸ் மதுரை பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 8497/2024/இ3,

**அலுவலக குறிப்பு:**

மாமன்றம் அனுமதிவழங்கலாம்.

**தீர்மான எண்.1467** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

30) திண்டுக்கல் மாநகராட்சி பொறியியல் பிரிவு பாதாள சாக்கடைப் பிரிவு வாகனம் TN57BJ 9229 க்கு (ஜெட்ராடிங்) டயர்கள் பழுதான நிலையில் உள்ளதால் வாகனத்தை இயக்க முடியவில்லை. எனவே மேற்காணும் வாகனத்திற்கு முன்பக்க டயர்கள் எண்ணம் 2 பின்பக்கம் உள்ள டயர்கள் 4 எண்ணம் மொத்தம் 6 டயர்கள் புதிதாக வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவின ரூ. 1,10,000/-க்கு (வருவாய் நிதி) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 672/2024/இ3,

அலுவலக குறிப்பு:

1.மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வழங்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.1468</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

31) திண்டுக்கல் மாநகராட்சி செயற்பொறியாளர் பயன்பாட்டு வாகனம் TN57BC1777- க்கு 2024-25 க்கு- ஆண்டுக்குரிய இன்சூரன்ஸ் தொகையை புதுப்பிப்பதற்கு ரூ. 11750/- ஐ நேஷனல் இன்சூன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 2921/2021/இ3,

அலுவலக குறிப்பு:

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மான எண்.1469</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

32) திண்டுக்கல் மாநகராட்சி வருவாய் பிரிவு பயன்பாட்டு வாகனம் TN 57H 3034 க்கு ரெனியூவல் செய்வதற்காக வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ரூ.2640/- செலுத்தப்பட்டது. செலுத்தப்பட்ட ரூ. 2640/- தொகை திரு. G. முருகேசன் என்பவரின் பெயரில் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4078/2024/இ3

அலுவலக குறிப்பு:

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மான எண். 1470</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

33) திண்டுக்கல் மாநகராட்சி மாண்புமிகு மேயர் பயன்பாட்டு வாகனம் TN57 BQ5959 க்கு 40,000 K.M வரை இயக்கப்பட்டதால் டயர்கள் பழுதாகி உள்ளது. எனவே புதிய டயர்கள் நான்கு எண்ணம் வாங்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.36,500/-க்கும், அதன் தொடர்பாக

விலைப்புள்ளி அறிவிப்புகள் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 8260/2024/இ3,

அலுவலக குறிப்பு:

1) மாமன்றம் அனுமதிவழங்கலாம்.
2) 2024-25 வருவாய் நிதியின் கீழ் பணியினை தொடர மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 1471</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

34) திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 25 மறைஞான நகர் மற்றும் கருப்பணசாமி கோவில் அருகில் மின்வாரியத்தை சேர்ந்த மின்கம்பங்கள் எண்.19 மற்றும் 88 ஆகியவைகள் பொதுமக்கள் செல்லும் பாதையில் அமைந்துள்ளதால் அதனை மாற்றியமைப்பதற்கு மலைக்கோட்டை மின்பிரிவில் இருந்து ரூ.37,800/- பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது.

எனவே மேற்காணும் பட்டியல் தொகை ரூ.37,800/- மலைக்கோட்டை மின்பிரிவிற்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.6233/2024/இ3

அலுவலக குறிப்பு..

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மான எண்.1472</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

35) திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள ஆர்.எம்.காலனி 3வது குறுக்கு தெரு பகுதியில் மினிபவர் பம்பு- ல் தண்ணீர் இல்லாத காரணத்தினால் EB Service No.204-3185 நிரந்தர துண்டிப்பு செய்வதற்குரிய கட்டணத் தொகை ரூ. 15709/-ஐ செலுத்துவதற்கு பாண்டியன் நகர் மின் பிரிவில் இருந்து பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. எனவே மேற்காணும் தொகையை மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5336/2024//இ3

அலுவலக குறிப்பு..

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மான எண்.1473</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

36) நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்: 27968 /2022 / P1 நாள்: 09.1.2024 கடிதத்தில் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தில் கீழ்கண்ட தினசரி நாளிதழ்கள் மற்றும் பத்திரிக்கை

இதழ்களை வாங்கி பயன்படுத்துமாறு பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| Newspapers | Time of india, Hindu Tamil Thaisai and Employment News (Weekly ) |
| Magazines | Competition success review (C. S. R) ,CSR (G.K) Yojana , Thittam( திட்டம்) ,Kurukshetra, |

அதன்படி Time of india, Hindu Tamil Thaisai and Employment News (Weekly ) தினசரி நாளிதழ்கள் (தீபக் நியூஸ் ஏஜெண்ட்) மூலமாக 29.02.2024 நாள் 31.08.2024 வரை மாதம் ரூ.450/- வீதம் வாங்கியமைக்கும் இனிவரும் நாட்களில் வாங்குவதற்க்கும் இத்தொகையினை கல்விநிதி 2024-2025 -ன் கீழ் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 07363 / 2024 / இ4,

அலுவலக குறிப்பு:

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மான எண். 1474</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

37) திண்டுக்கல் மாநகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள உரி வசூல் மையத்திற்கு 2024-2025 ஆண்டுக்கு VPN கட்டணம் ரூ. 2,00,000/-ஐ வருவாய் நிதியின் கீழ் (2024-2025) செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.5153/2024/இ3)

**<u>அலுவலக குறிப்பு..</u>**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மான எண். 1475</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

38) திண்டுக்கல் மாநகராட்சிபொறியியல் பிரிவு குடிநீர் பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் பிளிசிங்பவுடர் குளோரின் அளவு 33.13% ஐ.எஸ்.ஐ தரமுடைய 2 மெ. டன் சப்ளை செய்ய 10.07.2024 ல் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

1. அக் ஷராகண்டராக்டர்ஸ்- ரூ. 80,000/-
   2 மெ.டன் பிளிச்சிங்பவுடர்
2. ஹெல்த் கேர் பார்மஸி - ரூ. 82,000/-
   2 மெ.டன் பிளிச்சிங்பவுடர்

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் குறைவான ஒப்பந்தப்புள்ளி ரூ.80,000/-க்கு தந்துள்ள அக் ஷரா காண்டராக்டர்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 4979/2024/இ3,

அலுவலக குறிப்பு:

மாமன்றம் அனுமதிவழங்கலாம்.

**<u>தீர்மான எண். 1476</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

39) திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள 10KVA UPS ல் உள்ள பழுதான 16 பேட்டரிகளை மாற்றம் செய்து புதிய பேட்டரிகளை Buy Block முறையில் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் (வருவாய் நிதி) ரூ. 1,50,000/'- க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 3197/2024/இ3,

அலுவலக குறிப்பு:

மாமன்றம் அனுமதிவழங்கலாம்.

**<u>தீர்மான எண்.1477</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

40) திண்டுக்கல் மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் TN57AB9241 - 6000லி ஜெட்ராடிங் வாகனத்தில் மோட்டர் பழுதாகி உள்ளது. அவ்வாகனத்தின் மோட்டாரை பழுது நீக்கம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 45,000/- த்தினை 2024-25 வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 2327/2024/இ3,

அலுவலக குறிப்பு:

1.மாமன்றம் அனுமதிவழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வழங்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.1478</u>**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

41) திண்டுக்கல் மாநகராட்சி பொறியியல் பிரிவு ஆழ்துளைக் கிணறுகளில் தண்ணீர் எடுக்கும் கீழ்க்கண்ட உபகரணங்கள் தேவைப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1 | 32mm GI Pipe - 3 Mtr ( 10 அடி) | 250 Nos×Rs. 1200 | ரூ. 3,00,000/- |
| 2. | 32 mm GI coupling | 500 Nos×Rs. 100 | ரூ. 50,000/- |
| 3. | Connectiong rod 3 Mtr ( 10 அடி) | 250 Nos×Rs.470 | ரூ. 1,17,500/- |
| 4. | Stand(T) | 50 Nos×Rs.4450 | ரூ. 2,22,500/- |
| 5. | Head with handle | 50 Nos×Rs.6685 | ரூ. 3,34,250/- |
| 6. | Water Tank (mouth) | 50 Nos×Rs.2100 | ரூ. 1,05,000/- |
| 7. | M12 × 40 hex bolt | 500 Nos×Rs.9 | ரூ. 4,500/- |
| 8. | M12 × hex nut | 500 Nos×Rs.6 | ரூ. 3,000/- |

| | |
|---|---|
| Net Total | ரூ. 11,35,750/- |
| SGST 2.5% | ரூ. 11,413.00/- |
| CSGST 2.5% | ரூ. 11,413.00/- |
| Grand Total | ரூ. 11,59,576/- |

மேற்காணும் தொகையை Tansi Tools Engineering Works அரியமங்கலம், திருச்சி என்ற நிறுவனத்திற்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 11426/2023/இ3,

அலுவலக குறிப்பு:

1.மாமன்றம் அனுமதிவழங்கலாம்.

2. மேற்காணும் மதிப்பீடு ரூ.12.00 இலட்சத்திற்கு குடிநீர் நிதியிலிருந்து செலவழிக்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1479** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

42) திண்டுக்கல் மாநகராட்சியில் தமிழ்நாடு தட்பவெப்ப நிலையைத் தாங்கும் நகர்ப்புற வளர்ச்சித் திடடம் 2023-24 ன் கீழ் திண்டுக்கல் மாநகராட்சியில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 14.60 MLD கொள்ளளவு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் வடிவமைத்துக் கட்டுதல் அதன் பின் இயக்குதல் மற்றும் பராமரிக்கும் பணி, மேற்கொள்ளுதல் பணிகளுக்காக கடந்த 26.2.2024 இல் மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் ஒப்பந்தப்புள்ளி கோரி விளம்பரம் செய்தமைக்கு Bright Advertising, Chennai நிறுவனத்திற்கு விளம்பரக் கட்டணத் தொகை ரூ.231158/- ஐ வழங்கக் கோரி ஷை நிறுவனத்தினரால் கோரப்பட்டுள்ளது. கட்டணத் தொகை ரூ.231158/- Bright Advertising, Chennai நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது. ந.க.எண்.7695 / 2023 / இ4

**அலுவலக குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்கண்ட தொகையினை வருவாய் நிதி 2023-24 இன் கீழ் வழங்கலாம்.

**தீர்மான எண்.1480** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

43) திண்டுக்கல் மாநகராட்சியில் மாதந்தோறும் நடத்தப்பெறும் இயல்பு/ அவசர/ சிறப்பு கூட்டங்களுக்கான மன்ற கூட்டப்பொருள்கள், வரவு / செலவு அறிக்கைகள் நிர்வாக அறிக்கைகள் மற்றும் திட்ட அறிக்கைகள் தயார் செய்து மாமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர், அலுவலக பிரிவு தலைவர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்களுக்கு அனுப்பிட வேண்டியுள்ளது.

2) மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தினை முன்னிட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் விபரப்படி 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **பணியின் விபரம்** | **நிறுவன விபரம்** | | |
|---|---|---|---|---|
| | | **ஜீவகன் பிரஸ் (ரூ.)** | **கண்ணன் பிரஸ் (ரூ.)** | **ஜீபிடர் ஆப்செட் பிரஸ் (ரூ.)** |
| 1 | மன்ற பொருள் பட்டியல் ஒரு பக்கத்திற்கு கணினியில் Page Maker DTP ல் தட்டச்சு செய்து அச்சடித்திட ஏதுவாக மாஸ்டர் பிரதி தயார் செய்யும் பணி பக்கம் 1க்கு | 435 | 525 | 565 |
| 2 | மன்ற பொருளுக்கான முகப்பு மற்றும் பின்புற அட்டை (மல்டி கலர்) | 45 | 65 | 80 |
| 3 | பிரதிகள் எடுக்க | 1.50 | 1.90 | 2.30 |

மேற்கண்ட வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஜீவகன் பிரஸ் அச்சகத்திலிருந்து மாமன்ற கூட்டப்பொருள் அச்சிட்டு பெறுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.4788 /2024 /சி2)

**அலுவலக குறிப்பு**

1) குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஜீவகன் பிரஸ், திண்டுக்கல் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி, பணி உத்திரவு வழங்கியதையும் ஏற்கலாம்.

**தீர்மான எண்.1481** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

44) இம்மாநகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்படும் வழக்குகளில் இம்மாநகராட்சி சார்பாக ஆஜராகிட திரு.ஜே. லாரன்ஸ், உயர்நீதிமன்ற வழக்கறிஞரை இம்மாமன்ற வழக்கறிஞராக 14.09.2023 முதல் தற்காலிகமாக பணி நியமனம் செய்து உத்திரவிடப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு வந்த

நிலையில், மேற்படி இம்மாமன்ற நிலை வழக்கறிஞர் பணி நியமன காலம் 30.06.2024 உடன் முடிவடைந்துவிட்டதால், பணியின் அவசர அவசியம் கருதி திரு.ஜே. லாரன்ஸ் வழக்கறிஞருக்கு வழங்கப்பட்ட மேற்படி பணி நியமன காலத்தினை மேலும் 6 மாத காலத்திற்கு (01.07.2024 முதல் 31.12.2024) நீட்டித்து வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.8495/2023/சி1).

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.1482</u>**அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

45) திண்டுக்கல் மாநகராட்சி பூங்கா அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் குறிப்பில் திண்டுக்கல் மாநகராட்சியில் பராமரிக்கப்படும் பூங்காங்களின் தற்போதைய நிலை குறித்து அறிக்கை தயார் செய்து சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன் படி மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் கடிதத்தில் தற்போது மாநகராட்சியில் உள்ள அபிவிருத்தி செய்யப்பட்ட பூங்காக்கள் 24 எண்ணங்களில் தெற்கு மண்டலத்தில் உள்ள 5 பூங்காக்களில் புல் புதர்கள் சுத்தம் செய்தல், மின் விளக்குகள் சரிசெய்யதல் , பைப்லைன் சரிசெய்யதல் , கழிவறைகள் பராமரித்துப் பணி , கதவுகள் சரிசெய்யதல் ,பேவர் கற்கள் நடைபாதை சீரமைத்தல், உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காக்களை உடனடியாக பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்தினை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சிகள் சட்டம், 2022 விதி 57(7) ன் கீழ் பதிவு பெற்ற ஒப்பந்ததாரரிடம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் செய்து தர சம்மத கடிதம் பெற்று வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மாமன்றக் கூட்டத்தில் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது..

( **ந.க.எண்.950/ 2024 / இ4**)

**<u>அலுவலக .குறிப்பு</u>**

1) மாமன்றம் பதிவு செய்யலாம்..

**<u>தீர்மான எண்.1483</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

46) திண்டுக்கல் மாநகராட்சி செயல்திறன் உதவியாளர் நிலை- II இல் பணிபுரிந்து வரும் திரு**.**வி**.**சிவசுப்ரமணியன்**,** என்பவருக்கு அரசாணை எண்.762 நிதித்துறை நாள்.20.8.1986 மற்றும் எண்**.**123 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை **(**ந.ப**.3)** நாள்.

28.2.2011-ன்படி மேற்படியாளருக்கு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டது தவறு எனவும் கூடுதலாக வழங்கப்பட்ட ஊதியத்தினை பிடித்தம்செய்ய வேண்டும் என இம்மாநகராட்சியின் உடன் நிகழ் தணிக்கை துறை அவர்களால் தணிக்கை தடை எழுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் தனியருக்கு அக்டோபர் 2022 மாத ஊதியம் நிர்ணயம் செய்து ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டதற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு W.P.(MD)எண்.19855 of 2023 இல் வழக்கு தொடரப்பட்டு தடையாணை பெறப்பட்டுள்ளது இம்மாமன்ற வழக்கறிஞர் 05.08.2024 ஆம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, இம்மாமன்ற வழக்கறிஞர் கட்டணம் ரூ.7500/-ஐ மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர், திரு.ஜெ.லாரண்ஸ் அவர்களுக்கு வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க.எண். 7579/2023/இ.1 )

அலுவலக குறிப்பு..

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் மாமன்றத்தின் அனுமதி பெற்று திரு.ஜெ.லாரண்ஸ் வழக்கறிஞர் அவர்களுக்கு பட்டியல் தொகை ரூ.7500/-ஐ வழங்கிட அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1484** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

47) திண்டுக்கல் மாநகராட்சி செயல்திறன் உதவியாளர் நிலை-I இல் பணிபுரிந்து வரும் திரு. இரா. சக்திவேல், என்பவருக்கு அரசாணை எண்.762 நிதித்துறை நாள்.20.8.1986 மற்றும் எண்.123 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.ப.**3**) நாள். 28.2.2011-ன்படி மேற்படியாளருக்கு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டது தவறு எனவும் கூடுதலாக வழங்கப்பட்ட ஊதியத்தினை பிடித்தம்செய்ய வேண்டும் என இம்மாநகராட்சியின் உடன் நிகழ் தணிக்கை துறை அவர்களால் தணிக்கைத்தடை எழுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் தனியருக்கு அக்டோபர் 2022 மாத ஊதியம் நிர்ணயம் செய்து ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டதற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு **W.P.(MD)**எண்.19747/2023 இல் வழக்கு தொடரப்பட்டு தடையாணை பெறப்பட்டுள்ளது என இம்மாமன்ற வழக்கறிஞர் 05.08.2024 ஆம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே,இம்மாமன்ற வழக்கறிஞர் கட்டணம் ரூ.7500/-ஐ மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர், திரு.ஜெ.லாரண்ஸ், அவர்களுக்கு வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க.எண். 7984/2023/இ.1, )

**அலுவலக குறிப்பு..**

**1.** மாமன்றம்அனுமதிக்கலாம்.

**2.** பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் மாமன்றத்தின் அனுமதி பெற்று திரு.ஜெ.லாரண்ஸ் வழக்கறிஞர் அவர்களுக்கு பட்டியல் தொகை ரூ.7500/-ஐ வழங்கிட அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.1485</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

48) திரு.கே. ஆல்ராஜ், தேர்ச்சிதிறனற்ற பணியாளர் தனியர் தனிநபர் குழுவில் தரஊதியம் 1650 இல் இருந்து 2400 வழங்கியும் அதன்பிறகு 4200/- தரஊதியம் வழங்கப்பட்டுள்ளதை இம்மாநகராட்சி உடன் நிகழ் தணிக்கையில் மேற்படியாளருக்கு வழங்கப்பட்டது தவறு என சுட்டிக்காட்டி தணிக்கைத்தடை பத்தி எழுப்பப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்படியாளர் கடந்த 30.04.2022 இல் ஓய்வு பெற உள்ளதற்காக தணிக்கைத்தடைப்பத்தியினை நீக்கம் செய்த பின்னர் ஒய்வுபெற இயலும் என்பதை தெரிவித்து தனியருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு தனியர் ஆட்சேபனை ஏதும் எழுப்பாமல் எனக்கு கூடுதலாக வழங்கப்பட்டுள்ள தொகையினை எனது ஓய்வூதிய பணிக்கொடையில் பிடித்தம் செய்ய சம்மதிக்கிறேன் என்று எழுத்துப்பூர்வமாக தெரிவித்தன் அடிப்படையில் தனியரை 30.04.2022 இல் ஒய்வு பெற்றுள்ளார். மேற்படியாளர் தனக்கு கூடுதலாக பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.543972/-ஐ திரும்ப வழங்க வேண்டும் என உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் WP(MD)19509/2023 இல் தொடரப்பட்ட வழக்கு.

எனவே, இம்மாமன்ற வழக்கறிஞர், திரு.ஜெ.லாரண்ஸ் அவர்களுக்கு கட்டணம் ரூ. 7500/- ஐ வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 7688/2023/இ1

அலுவலக குறிப்பு..

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் மாமன்றத்தின் அனுமதி பெற்று திரு.ஜெ.லாரண்ஸ் வழக்கறிஞர் அவர்களுக்கு பட்டியல் தொகை ரூ.7500/-ஐ வழங்கிட அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.1486</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

49) திண்டுக்கல் மாநகராட்சியில் பள்ளி மேம்பாட்டு மானியம் மூலதன பணி 2024 -25 இன் கீழ் வார்டு எண் 23, மேற்கு ரத வீதியில் உள்ள நகராட்சி தொடக்கப் பள்ளிக்கு கழிப்பறை கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.15.50 இலட்சத்திற்கு 03.10.2024 அன்று முதல் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எ ண் | ஒப்பந்தத்தாரரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1. | திருபி.செந்தில்கு மார் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.15500/- மதிப்புள்ள செலுத்து சீட்டு நகல் |
| 2. | திரு.பொன்முருகன் | 11.94% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.15500/- மதிப்புள்ள செலுத்து சீட்டு நகல் |

முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.செந்தில்குமார், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மேற்கூறிய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் அனுமதிக்கு எதிர்வரும் மாமன்றத்தில் பின்னேற்பு பெறவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது. ந.க.எண்.3561/2024/இ 4

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண். 1487</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

50) திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு, இம்மாநகராட்சி மூலம் BULK Supply வழங்குமாறு முதல்வர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை 24.09.2024ல் தேதிய கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். அதன்படி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு BULK Supply வழங்கிட குழாய் பதிக்கும் பணிக்காக மதிப்பீடு ரூ.4.00 லட்சம் மற்றும் வைப்புத்தொகை ரூ.40,000 ஆக மொத்தம் ரூ.4,40,000/. இம்மாநகராட்சிக்கு செலுத்தவும் உபயோகப்படுத்தப்படும் குடிநீருக்கு 1000 லிட்டர் –க்கு ரூ.16.80 என்ற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நிர்ணயம் செய்த விலை விகித அடிப்படையில் குடிநீர் கட்டணம் வசூல் செய்வதற்கும், இக்கட்டணம் ஆண்டுக்கு 5% உயர்த்தப்பட்டு வசூல் செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.8488/2024/இ2

**அலுவலக குறிப்பு:**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மான எண். 1488</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

51) இம்மாநகராட்சி பகுதிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், திடக்கழிவுகளை குறைத்திடும் வகையில் மறு சுழற்சி மேற்கொள்ளும் விதமான விழிப்புணர்வு மற்றும் தனி நபர் கழிப்பிடங்கள் பயன்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு பணிகளுக்கு 24 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள், 1 ஒருங்கிணைப்பாளர் ஆகியோரை ஒப்பந்த அடிப்படையில், BPA கன்ஸ்ட்ரக்சன், திண்டுக்கல் நிறுவனத்திற்கு 01.06.2022 முதல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தின் பணி நீட்டிப்பு காலம் 31.05.2024 உடன் முடிவடைந்து விட்டது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனமானது தனது ஒப்பந்த பணிக்காலத்தினை அடுத்த ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்து தரக் கோரி 13.05.2024ம் தேதி கடிதம் வரப்பெற்றுள்ளதைத் தொடர்ந்து, தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ள தற்போது தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் முடிவுற்றதால், பணியின் அவசர அவசியம் கருதி 01.06.2024 முதல் 31.05.2025 வரை BPA கண்ஸ்ட்ரக்சன் நிறுவனத்திற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு செய்து வழங்கியமைக்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.2232/2022/எச்2)**

<u>**அலுவலக குறிப்பு**</u>

1) அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மான எண்.1489**</u> அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

52) இம்மாநகராட்சியின் மாண்புமிகு. மேயர் அவர்கள் மாமன்றக் கூட்டங்களின் போது அணியக்கூடிய தங்க பதக்க மாலையினை பேங்க் ஆப் பரோடா வங்கி, திண்டுக்கல், கிளையின் பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்து பாதுகாப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்புப் பெட்டகத்திற்கான கட்டணத்தை செலுத்தக் கோரி மேலாளர், பேங்க் ஆப் பரோடா வங்கி, திண்டுக்கல் அவர்களின் 29.07.2024ம் தேதிய கடித்தத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பாதுகாப்பு பெட்டகத்திற்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவை தொகை ரூ.5,360/-ஐ இம்மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.5407/2023/சி2)**

<u>**அலுவலக குறிப்பு..**</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. வருவாய் மற்றும் மூலதனநிதியில் இருந்து செலவினத்தை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 1490** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

53) திண்டுக்கல் மாநகராட்சியின் கீழ் இயங்கி வரும் 17 எண்ணிக்கையிலான மேல்நிலைப்பள்ளி, நடுநிலைப்பள்ளி மற்றும் துவக்கப்பள்ளிகளில் பயின்று வரும் மாணவ, மாணவியர்களது வாசிப்புத் திறனை மேம்படுத்தும் வகையில் ஆங்கில தினசரி பத்திரிகையான " இந்தியன் எக்ஸ்பிரஸ் " மற்றும் " தினமனி " தினசரி நாளிதழ் ஆகியவற்றை மேல்நிலைப்பள்ளி (1) உயர்நிலைப்பள்ளி (1) பள்ளிகளுக்கு தலா 2 வீதமும் நடுநிலைப்பள்ளி (1) மற்றும் 14 எண்ணிக்கை கொண்ட துவக்கப்பள்ளிகளுக்கு தலா ஒரு பிரதி வீதமும் தினசரி மொத்தம் 38 பிரதிகள் வீதம் 150 நாட்களுக்கு 5700பிரதிகள் விநியோகம் செய்ய " இந்தியன் எக்ஸ்பிரஸ் " குழுமத்திற்கு பணி ஆணை வழங்கவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 35000/- (ரூபாய் முப்பத்து ஐந்தாயிரத்து மட்டும்)ஐ மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 10821/2022/சி5)

**அலுவலகக் குறிப்பு**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1491** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

54) திண்டுக்கல் மாநகராட்சி எல்கைக்குட்பட்ட ஆர்.எம்.காலனி 80 அடி சாலையில் ஆவின் பாலகப்பெட்டியை மாநகராட்சியின் மூலம் அப்புறப்படுத்தியதற்கு 1) (லேட்) திரு. சுகுமாறன் 2) திருமதி. அழகுமொழி அமுது என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் வழக்கு எண். W.P.(MD) No: 24794/2022 மற்றும் WMP(MD) No: 18866, 18868 & 18870/2022 –ல் தொடர்ந்த வழக்கின் 25.04.2023-ம் தேதிய தீர்ப்பு பெறப்பட்டுள்ளது.

இவ்வுத்திரவினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் மேல்முறையீடு செய்ய இம்மாநகராட்சி மாமன்ற வழக்கறிஞர் திரு.எம்.திருநாவுக்கரசு அவர்களுக்கு 14.06.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதுதொடர்பாக. 2-ம் வாதியான திருமதி. அழகுமொழி அமுது என்பவர் ஆர்.எம்.காலனி 80 அடி சாலையின் விளிம்பில் இருந்து 7மீட்டர் தள்ளி ஆவின் பாலகம் பெட்டி அமைத்துக்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் மேற்கண்ட இடத்தில் ஆவின் பாலகம் அமைக்கவும், மேலும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் உரிய உத்தரவு

பெற்ற பின் ஆவின் பாலகம் பெட்டி அமைக்க மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 9102/2022/எப்2)**

அலுவலககுறிப்பு..

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1492** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

55) திண்டுக்கல் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதி எண் 24 ல் முத்தழகுப்பட்டியில் புனித அந்தோனியார் ஆலயம் அமைந்துள்ளது. வருடாந்திரம் நடைபெறும் திருவிழாவின் போது அப்பகுதி மக்களுக்கும் வெளியூரில் இருந்து நிறைய மக்கள் கலந்து கொள்வார்கள். மேலும் கோவில் எதிர்புறம் தெருவில் மண்தளம் உள்ளதால் அதனை சரிசெய்து பேவர்கற்கள் பதிக்கவும் கோவில் எதிர்புறத்தில் சிறுபாலம் மற்றும் நடை அமைத்திடவும் அதற்கான உத்தேச மதிப்பீடு தயார் செய்து ரூபாய் 7,50,000/- (ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மேற்படி பணியினை மேற்கொள்ள மாமன்றத்தில் அனுமதி வழங்கலாம். ந.க.எண். 06341 / 2024/இ4

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.1493** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

56) திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்ப்பட்ட வார்டு எண் 6, ப்ளாக் எண் 24, நகர புல எண் 1124/1, ஏஎம்சி சாலையில் நவீன வணிக வளாகம் பணிக்கு விரிவான திட்டஅறிக்கை (Detailed Project Report) தயாரிக்கும் பணிக்கு கலந்தாலோசகரின் நியமனம் செய்யும் பணியினை அவசரமாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், பணியின் அவசரம் அவசியம் கருதி மாமன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி தமிழ்நாடு டெண்டர் வெளிப்படை தன்மை விதிகள் 2000, விதி எண் 33 ன்படி, ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மேற்படி பணியினை மேற்கொள்ளவும் அதற்குரிய மதிப்பீட்டு விலை விகிதத்தில் 1.50% வழங்கவும் மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது. ந.க.எண். 04115 / 2024/ இ 4

**அலுவலக குறிப்பு:**

அ) அனுமதிக்கலாம்

ஆ) மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.1494** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

57) திண்டுக்கல் மாநகராட்சி கோபால சமுத்திரம் குளத்தில் தேங்கியுள்ள மண்ணை இயந்திரங்கள் மூலம் அகற்றி, அம்மண்ணை

குளக்கரைகளை பலப்படுத்தவும், கோபாலசமுத்திரத்திற்கு கிழக்கு பகுதியில் உள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடங்களின் மழைநீரை பைப்கள் பதித்து நேரடியாக கோபால சமுத்திர குளத்தில் விடுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ரூ10.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை மழைக்காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டிய அத்தியாவசிய பணி என்பதால் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சிகள் சட்டம் 2022 விதி 57 (7)ன் கீழ் பதிவு பெற்ற ஒப்பந்ததாரரிடம் பணி மேற்கொள்ள விலைப்புள்ளி பெறப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1.M/sசீனிவாசா கன்ஸ்ட்ரக்க்ஷன் | ரூ.9,07,559/- | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 2.M/s சூர்யா ஏஜென்ஸி | ரூ.9,15,084/- | மதிப்பீட்டை விட 0.81 % கூடுதல் |
| 3. திரு. அமல்ராஜ் ஒப்பந்ததாரர் | ரூ.9,07,798/- | மதிப்பீட்டை விட 0.01 % கூடுதல் |

மேலும் மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு பணியினை உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மதிப்பீட்டை விட 0.02% குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s சீனிவாசா கன்ஸ்ட்ரக் ஷன் நிறுவனத்திற்கு, மாமன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி, மாண்புமிகு மேயர் அவர்களின் அனுமதி பெற்று, பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

நகஎண். 7279 /2024/இ4

**அ.குறிப்பு**

1) மாமன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1495** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

58) திண்டுக்கல் மாநகராட்சிக்கு சொந்தமான 18 எண்ணம் கொண்ட குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளில் குடிநீர் விநியோகத்தின் போது குளோரினேஷன் செய்வதற்கு பிளிச்சிங் பவுடர் தேவைப்படுகிறது.

மேலும், வடகிழக்கு பருவ மழை 2024 காலம் தொடங்கும் நிலையில் உள்ளதால் 5 மெட்ரிக் டன் பிளிச்சிங் பவுடர் 33.13% குளோரின் அளவு உள்ளதை வாங்கவும், அதற்குரிய செலவினத்திற்கும் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க.எண்.8214/2024/இ3)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ. 300000/-க்கு குடிநீர் நிதியின் கீழ் 2024- 2025 கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 1496</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

59) திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட பாண்டியன் நகர் மின்பிரிவை சேர்ந்த மின் இணைப்பு எண். 204-004-3094 ஐ நிரந்தர துண்டிப்பு செய்வது கேட்புத் தொகை ரூ. 7017/- செலுத்த பாண்டியன் நகர் மின் பிரிவிலிருந்து வரப்பெற்றுள்ளது.

எனவே மேற்படி மின் இணைப்பு எண். 204-004-3094 நிரந்தர துண்டிப்பு செய்வதற்கு கேட்புத்தொகை ரூ. 7017/-ஐ பாண்டியன் நகர் மின் பிரிவுக்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.5256/2024/இ3)

அலுவலக குறிப்பு..

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மான எண். 1497</u>**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

60) திண்டுக்கல் மாநகராட்சியில்உள்ள சொத்துவரி, குடிநீர்கட்டணம், தொழில்வரி, பாதாளசாக்கடை கட்டணம், பிறப்பு மற்றும் இறப்பு, வரியில்லா இனங்கள் மற்றும் ஏனைய பணிகள் அனைத்தும் கணினி மூலமாகவே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணிகளை செய்வதற்குஇம்மாநகராட்சியில் போதுமாக கணினிகள் இல்லாத காரணத்தினால் புதிய கணினிகள் மற்றும்பிரிண்டர்கள் வாங்குவதற்கு ஆகும்உத்தேசசெலவினம்ரூ. 15,00,000/- இலட்சத்திற்குவருவாய் நிதி 2024-2025 ன் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 8369/2024/இ3,

அலுவலக குறிப்பு:

1) மாமன்றம் அனுமதிவழங்கலாம்.
2) வருவாய் நிதி 2024-2025 ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.1498</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

61) திண்டுக்கல் மாநகராட்சி பொறியியல் பிரிவு உதவிசெயற்பொறியாளர் பயன்பாட்டு வாகனம் TN57D9018 க்கு தகுதிச்சான்று புதுப்பிக்கும் பணிக்கு 30.08.2024 ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன அவை பின்வருமாறு.

1.குமார் ஆட்டோ கேர் - ரூ. 45,450/-

2.விநாயகா ஆட்டோ மொபைல்ஸ் -ரூ. 50,600/-

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் குறைவான ஒப்பந்தப்புள்ளி ரூ. 45,450/-க்கு தந்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியைஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 5155/2024/இ3,

அலுவலக குறிப்பு:

மாமன்றம் அனுமதிவழங்கலாம்.

**<u>தீர்மான எண்.1499</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

62) திண்டுக்கல் மாநகராட்சிபொறியியல் பிரிவு பாதாள சாக்கடை பயன்பாட்டு வாகனம் TN57BJ9316 க்கு தகுதிச்சான்று புதுப்பிக்கும் பணிக்கு 23.08.2024 ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன அவை பின்வருமாறு.

1. குமார் ஆட்டோ கேர் - ரூ. 1,13,000/-

2.விநாயகா ஆட்டோ மொபைல்ஸ் -ரூ. 1,21,400/-

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் குறைவான ஒப்பந்தப்புள்ளி ரூ. 1,13,000/-க்கு தந்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியைஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 11435/2023/இ3,

அலுவலக குறிப்பு:

மாமன்றம் அனுமதிவழங்கலாம்.

**<u>தீர்மான எண். 1500</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

63) திண்டுக்கல் மாநகராட்சிபொறியியல் பிரிவு பாதாள சாக்கடை பயன்பாட்டு வாகனம் TN57BJ9229 க்கு தகுதிச்சான்று புதுப்பிக்கும் பணிக்கு 23.08.2024 ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன அவை பின்வருமாறு.

1. குமார் ஆட்டோ கேர் - ரூ. 2,19,100/-

2. விநாயகா ஆட்டோ மொபைல்ஸ் -ரூ. 2,34,300/-

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் குறைவான ஒப்பந்தப்புள்ளி ரூ. 2,19,100/-க்கு தந்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியைஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 11748/2023/இ3,

அலுவலக குறிப்பு:

மாமன்றம் அனுமதிவழங்கலாம்.

**<u>தீர்மான எண்.1501</u>** அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

64) திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தினை மாநில செய்தி மலர் மற்றும் மாநில அளவிலான தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான கட்டண விவரம் கீழ் காணும்மாறு.

| **வ.எண்** | **பணியின் பெயர் விவரம்** | **பத்திரிக்கையின் பெயர் விவரம்** | **விளம்பரம்செய்தமைக்கான பட்டியல் தொகை** |
|---|---|---|---|
| 1 | திண்டுக்கல் மாநகராட்சியில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கீழ் 2022- 2023 ஆம் ஆண்டின் கீழ் நத்தம் சாலை குடகனாறு இல்லத்தின் கிழக்கு பகுதியில் நவீன மீன் சந்தை அமைக்கும் பணி | BRIGHT ADVERTISING | ரூ.1,15,185/- |
| 2 | திண்டுக்கல் மாநகராட்சியில் மூலதன மான்ளய நிதி 2024-2025 ஆம் ஆண்டின் கீழ் திண்டுக்கல் மாநகராட்சியில் வார்டு எண் 6, பிளாக் எண் 24, நகர புல எண் 1124/1 , ஏஎம்சி சாலையில் நவீன வணிக வளாகம் கட்டும் பணிக்கு | BRIGHT ADVERTISING | ரூ.1,15,185/- |
| 3 | திண்டுக்கல் மாநகராட்சியில் மூலதன மான்ளய நிதி 2024-2025 ஆம் ஆண்டின் கீழ் திண்டுக்கல் மாநகராட்சியில் வார்டு எண் 6, பிளாக் எண் 24, நகர புல எண் 1124/1 , | BRIGHT ADVERTISING | ரூ.1,00,538/- |

| | | | |
|---|---|---|---|
| | ஏஎம்சி சாலையில் நவீன வணிக வளாகம் கட்டும் பணிக்கு(மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி ) | | |
| | | மொத்தம் | ரூ.2,30,370/- |

மேற்காணும் விளம்பரம் செய்தமைக்கான பட்டியல் தொகை வருவாய் நிதி (2024-2025) யில் இருந்து பத்திரிக்கை நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதிக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண். 01896 / 2024 / இ 4)**

**அலுவலககுறிப்பு.**

மாமன்றத்தின் அனுமதி மற்றும் பதிவிற்கு- அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1502** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

65) திண்டுக்கல் மாநகராட்சி பூங்கா அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் குறிப்பில் திண்டுக்கல் மாநகராட்சியில் பராமரிக்கப்படும் பூங்காங்களின் தற்போதைய நிலை குறித்து அறிக்கை தயார் செய்து சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன் படி மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் கடிதத்தில் தற்போது மாநகராட்சியில் உள்ள அபிவிருத்தி செய்யப்பட்ட பூங்காக்கள் 24 எண்ணங்களில் தெற்கு மண்டலத்தில் உள்ள 5 பூங்காக்களில் புல் புதர்கள் சுத்தம் செய்தல், மின் விளக்குகள் சரிசெய்யதல் , பைப்லைன் சரிசெய்யதல் , கழிவறைகள் பராமரித்துப் பணி , கதவுகள் சரிசெய்யதல் ,பேவர் கற்கள் நடைபாதை சீரமைத்தல், உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காக்களை உடனடியாக பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்தினை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சிகள் சட்டம், 2022 விதி 57(7) ன் கீழ் பதிவு பெற்ற ஒப்பந்ததாரரிடம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் செய்து தர சம்மத கடிதம் பெற்று வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மாமன்றக் கூட்டத்தில் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

( **ந.க.எண்.950/ 2024 / இ4**)

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண். 1503** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

66) திண்டுக்கல் மாநகராட்சியில் 413 எண்ணம் சிறுமின்விசை இறைப்பான்களும் 152 எண்ணம் அடி குழாய்களும் உள்ளன. இதன் மூலம் பெறப்படும் தண்ணிர் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கென பயன்பட்டு வருகின்றது. தற்போது நிலவி வரும் கோடை காலத்தில் வெயில் அதிகரித்து, மக்களின் குடிநீர் தேவை அதிகரித்துள்ளது இதனால் குழாய் இணைப்பில் பழுது, HDPE Tank மாற்றுதல், மின் இணைப்பில் ஏற்பட்டுள்ள பழுது, மோட்டார் அறையில் கதவுகள் சரிசெய்தல் போன்ற சிறு பழுதுகளை உடனடியாக சரிசெய்து மின் விசை இறைப்பான்களை பயன்பாட்டிற்கு கொண்டு வருவது அவசியமாகின்றது. இதற்கென வடக்கு மற்றும் தெற்கு மண்டலத்தில்குறைபாடுகளுடன் உள்ள சிறு மின் விசை இறைப்பான் பழுது நீக்குவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் ஆகும். இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சிகள் சட்டம், 2022 விதி 57(7)ன் கீழ் பதிவு பெற்ற ஒப்பந்ததாரரிடம் மூலம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் செய்து கொடுக்க சம்மத கடிதம் பெற்று வேலை வழங்கி பணி மேற்கொண்டதை மாமன்றக் கூட்டத்தில் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. ( **ந.க.எண்.1299/ 2024 / இ4**)

**<u>அலுவலக.குறிப்பு</u>**

1) மாமன்றம் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மான எண்.1504</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

67) திண்டுக்கல் மாநகராட்சி மேற்கு கோபாலசமுத்திரம் அரசு மருத்துவமனை பின்புறம் உள்ள மழைநீர் வடிகாலில் மேல்மூடி இன்றி அடிக்கடி விபத்து ஏற்படும் விதமாக உள்ளது. அவ்வடிகாலில் சிமெண்ட் காங்கிரீட் கொண்டு மேல்முடி அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூபாய் 4.30 லட்சத்திற்கு மாமன்ற அனுமதி வழங்கப்படுகிறது.

(ந.க.எண்.08427/2024/இ4)

**அலுவலக குறிப்பு..**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணியினை மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மான எண். 1505</u>**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

68) திண்டுக்கல் மாநகராட்சிக்கு கிழக்கு மரியநாதபுரம் வார்டு எண் 34 வடிகால் இல்லாத காரணத்தால் சாக்கடை மற்றும் கழிவு நீர் வீட்டு வாசல் வழியாக செல்வதால் அவ்விடத்தில் மழை நீர் வடிகால் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.16.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>தீர்மான எண்.1506</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

69) திண்டுக்கல் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் பணிகள் தூய்மை பாரத இயக்கம் நகர்ப்புறம் **2.0** திட்டத்தின் கீழ் தலா **10** டன் கொள்ளவுள்ள மறுசுழற்சி பொருட்கள் மீட்கும் மையத்தில் மதிப்பீட்டில் வழிவகை செய்யாத இனங்களான பக்கவாட்டு சுவர்களில் தடுப்பு அமைத்தல், Rolling chetter பொருத்துதல், மற்றும் Turbo fan பொருத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட கீழ்காணும் மதிப்பீடுகளுக்கு மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ. எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | பெஸ்கி காலேஜ் எதிர்ப்புறம் மறுசுழற்சி பொருட்கள் மீட்க்கும் மையத்தில் கூடுதல் கட்டுமான பொருட்கள் மேற்கொள்ளுதல் | ரூ. 15.00 லட்சம் |
| 2 | லாரிபேட்டை மறுசுழற்சி பொருட்கள் மீட்கும் மையத்தில் கூடுதல் கட்டுமான பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ. 15.00 லட்சம் |
| 3 | கோவிந்தாபுரம் மயானம் உட்புறம் உள்ள மறுசுழற்சி பொருட்கள் மீட்க்கும் மையத்தில் கூடுதல் கட்டுமான பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ. 15.00 லட்சம் |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) அனுமதி வழங்கலாம்.
2) மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணி மேற்கொள்ளலாம்.
3) பணியின் அவசரம் அவசிய கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களை அனுமதி பெற்று ஒப்பந்த பள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மான எண்.1507</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

70) திண்டுக்கல் மாநகராட்சி கீழ்காணும் நுண்ணுரம் செயலாக்க மையங்களில் உள்ள குறைபாடுகளை அகற்றி தர மாநகர் நல அலுவலரால் கேட்டுக் கொண்டு கொண்டதற்கிணங்க இம் மையங்களின் பழுது நீக்குதல் மற்றும் கூடுதல் அபிவிருத்தி பணிகள்

மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.20.00லட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண் | மையம் அமைந்துள்ள இடம் |
|---|---|
| 1. | பெஸ்கி காலேஜ் எதிர்ப்புறம் |
| 2. | ஆர் எம் காலனி |
| 3. | பாறைப்பட்டி |
| 4. | விருந்தினர் மாளிகை |
| 5. | கே.எம். எஸ் நகர் |
| 6. | சந்தைப்பேட்டை |
| 7. | வேடபட்டி |

**அலுவலக குறிப்பு**

1 மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2 மாநகராட்சி வருவாய் நீதியின் கீழ் பணிகளை மேற்கொள்ளலாம்.
3 அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்பள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1508** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

71) திண்டுக்கல் மாவட்ட சாலைப் பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனை சாலையில் மருத்துவமனையின் தெற்கு வாயில் எதிரே இடிந்து விழுந்த நிலையில் உள்ள பேருந்து நிலையத்தில் பேருந்துகள் எதுவும் நின்று செல்வதில்லை என்பதாலும் அக்கட்டிடம் ஆபத்தான நிலையில் உள்ளதாலும் இடித்து அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது அதன்படி இடம் பேருந்து நிலையத்தை இடித்து அப்புறப்படுத்த தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.30000/-க்கு மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணி மேற்கொள்ளலாம்
3) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.1509** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

72) திண்டுக்கல் மாநகராட்சி கோடை காலத்தில் தினமும் வெயில் அதிகரித்து சராசரியாக 100 டிகிரி முதல் 103 டிகிரி வரை

பதிவாகின்றது. அதன் படி திண்டுக்கல் மாநகராட்சிக்குப்பட்ட பொது மக்கள் அதிகம் கூடும் கீழ்காணும் 11 இடங்களில் கோடை காலத்தில் தாகம் தீர்க்க ஏதுவாக நீர், மோர் மற்றும் ORS கரைசல் கொடுப்பதற்கு பந்தல் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **இடங்களின் விபரம்** | **எண்ணிக்கைகள்** |
|---|---|---|
| 1 | காமராசர் பேருந்து நிலையம் உட்புறம் | 2 எண்ணம் |
| 2 | ஏம்.எம்.சி சாலை சாகர் மெடிக்கல் முன்புறம் | 1 எண்ணம் |
| 3 | திருச்சி சாலை அரசு மருத்துவமனை முன்புறம் | 1 எண்ணம் |
| 4 | திருச்சி சாலை செயின்ட் ஜோசப் மருத்துவமனை முன்புறம் | 1 எண்ணம் |
| 5 | கோட்டைகுளம் சாலை காந்தி மார்க்கெட் முன்புறம் | 1 எண்ணம் |
| 6 | மணிக்கூண்டு சந்திப்பு | 1 எண்ணம் |
| 7 | சுப்பிரமணிய செட்டி தெரு மற்றும் சோலைஹால் சாலை சந்திப்பு | 1 எண்ணம் |
| 8 | சந்தை சாலை மாநகராட்சி பள்ளி எதிர்புறம் | 1 எண்ணம் |
| 9 | தினத்தந்தி ரவுண்டானா மாநகராட்சி பள்ளி அருகில் | 1 எண்ணம் |
| 10 | புகைவண்டி நிலையம் எதிர்புறம் | 1 எண்ணம் |
| மொத்தம் | | 11 எண்ணம் |

மேற்படி ஒவ்வொரு நீர்மோர் பந்தலுக்கு பெயர் பலகை வைத்து தேவையான 10′ X 10′ அளவுள்ள சாமியானா-1 எண்ணம் , மேசை-1 எண்ணம் சேர்-3 எண்ணம், வாடகை அடிப்படையிலும், பேரல்-2 எண்ணம், ஜக்-2 எண்ணம், டம்ளர்-5 எண்ணம், பிளாஸ்டிக் டிரே-1 எண்ணம், பிளாஸ்டிக் குடம்-1 எண்ணம், 5 லிட்டர் கேன்-11 எண்ணம், 10 லிட்டர் கேன்-5 எண்ணம், மற்றும் தினசரி அம்மையங்களுக்குத் தேவையான தயிர் சப்ளை செய்து தர வேண்டியுள்ளது. இம்மையம் ஏப்ரல் 14 முதல் 60 தினங்களுக்கு மேற்கூரை 11 மையங்களில் செயல்படுத்த தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000 ஆகும் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சிகள் சட்டம், 2022 விதி 57(7) ன் கீழ் மதிப்பீட்டு விலை விகிதத்தில் செய்து கொடுக்க சம்மத கடிதம் பெற்று வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மாமன்றக் கூட்டத்தில் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

( **ந.க.எண்.1298/ 2024 / இ4**)

**<u>அலுவலக .குறிப்பு</u>**

1) மாமன்றம் பதிவு செய்யலாம்.

**<u>தீர்மான எண்.1510</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

73) திண்டுக்கல் மாநகராட்சி பழனி சாலை மற்றும் கணபதி அக்ரஹாரம் சாலை சந்திப்பில் உள்ள 5 லட்சம் லிட்டர் மேல்நிலை நீர் தேக்க தொட்டியினை சுற்றி சுற்றுச்சுவர் இல்லாத காரணத்தினால் ஆக்கிரமிப்புகள் ஏற்படுவதுடன் போக்குவரத்திற்கு இடையூறு மற்றும் மேல்நிலை நீர் தேக்க தொட்டிக்கு உரிய பாதுகாப்பு இல்லாத நிலை உள்ளது இம் மேல்நிலை நீர் தேக்க தொட்டியினை சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி உடனடியாக முட்கம்பிகலான வேலி அமைக்கவும், நகரின் பிற முக்கிய பகுதிகளுக்கு வேலி அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 5,00,000/-க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2) வருவாய் நிதியின் கீழ் பணி மேற்கொள்ளலாம்.

3) அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதி எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்த புள்ளி கோருவதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மான எண். 1511</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

74) திண்டுக்கல் மாநகராட்சி எம்.வி.எம் நகர் 2வது தெருவில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் குழாய்கள் இணைப்பு வழங்குவதற்காக தார்சாலையின் குறுக்கே குழிகள் பறிக்கப்பட்டதன் காரணமாக தார் சாலை பல இடங்களில் சேதம் அடைந்து போக்குவரத்து இடையூறாக உள்ளது இச்சாலையினை சீரமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பு ரூ. 7,50,000/- க்கு மாமன் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்

2)மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணியினை மேற்கொள்ளலாம்.

3) பணியின் அவசர அவசியம் கருதி மாவட்டத்தின் அனுமதி எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்த புள்ளி கோருவதற்க்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 1512</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

75) திண்டுக்கல் மாநகராட்சியில் அலுவலக நேரங்களில் அனைத்து பிரிவு அலுவலர்களுடன் உடனடியாக தொடர்பு கொள்வதற்கு ஏதுவாக

33 எண்ணம் Inter Com அனைத்து உபகரணங்களுடன் பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.00 லட்சத்துக்கு மாமன்ற அனுமதி வேண்டும்.

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2) வருவாய் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மான எண்.1513</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

76) திண்டுக்கல் மாநகராட்சியில் கருவூலக அறை பழைய மாநகராட்சி கட்டிடத்தில் உள்ள வசூல் மையத்தில் இயங்கி வருகின்றது. இக் கருவூலக அறையினை மாநகராட்சி அலுவலக புதிய கட்டிடத்தில் மாற்றுவதற்கு அலுவலகத்தில் கூடுதல் வசதிகள் செய்வதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10,00,000/- க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2) வருவாய் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ளலாம்.

3) அவசரம் அவசியம் கருதி மாமன்ற அனுமதி எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்த பள்ளி கோரியதற்கும் மற்றும் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மான எண்.1514</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

77) திண்டுக்கல் மாநகராட்சியில் கடந்த 04.07.2024 அன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் முகாமில் அடிப்படை வசதிகள் செய்து தரக் கோரி வரப்பெற்ற மனுக்களில் குறிப்பிட்ட இடங்கள் நேராய்வு செய்யப்பட்டு தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| **வ.எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. (லட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | வார்டு எண் 38 சிவபெருமான் நகரில் தார் தளம் அமைக்கும் பணி | ரூ.10.00 இலட்சம் |
| 2 | வார்டன் 38 சிவபெருமாள் நகரில் வடிகால் மற்றும் பாலம் கட்டும் பணி | ரூ.7.00 இலட்சம் |

| | | |
|---|---|---|
| 3 | வார்டு எண் 11 காமராஜர் தெருவில் கழிப்பிடம் மராமத்துப்பணி | ரூ.5.00 இலட்சம் |
| 4 | வார்டு எண். 28 நெட்டுத்தெருவில் கழிப்பறை மராமத்து பணி | ரூ.4.00 இலட்சம் |
| 5 | வார்டு எண். 46 கே.எம்.எஸ் நகரில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | ரூ.10.10 இலட்சம் |
| 6 | வார்டு எண்.28 நெட்டுத்தெருவில் கழிவறை மராமத்துப்பணி | ரூ.5.50 இலட்சம் |

**அலுவலக குறிப்பு.**

1) மாமன்றம் அனுமதி வழஙகலாம்.
2) மாநகராட்சி பொது நிதியின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.1515** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

78) திண்டுக்கல் மாநகராட்சியில் வார்டு எண் 1, 8, 9,10, 28,36, 38 மற்றும் 46 இல் அடிப்படை வசதிகளான மழைநீர் வடிகால் கட்டுதல், சிமெண்ட் சாலை அமைத்தல் மற்றும் பேவர் பிளாக் சாலையை சிமெண்ட் சாலையாக மாற்றுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள அப்பகுதி மாமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது. அப்பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 228.30 லட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை | வார்டு | பணிகளின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (லட்சம்) |
|---|---|---|---|
| 1 | 1 | கருணாநிதி நகரில் சிமெண்ட் தளம் மற்றும் வடிகால் கட்டும் பணி. | 16.00 |
| 2 | 8 | காளிமுத்து பிள்ளை சந்து - பேவர் பிளாக் சாலையை சிமென்ட் சாலையாக மாற்றுதல் | 31.50 |
| 3 | 8 | மூக்கன் ஆசாரி சந்து - பேவர் பிளாக் சாலையை சிமென்ட் சாலையாக மாற்றுதல். | 8.70 |
| 4 | 9 | மேற்கு கோவிந்தாபுரம் முதல் தெருவில் சிமெண்ட் தளம் மற்றும் பாலம் கட்டும் பணி. | 2.70 |
| 5 | 9 | லஷ்மணபுரம் 1, 2 மற்றும் 4 வது தெரு-பேவர் பிளாக் சாலையை சிமென்ட் சாலையாக மாற்றுதல். | 21.00 |

| | | | |
|---|---|---|---|
| 6 | 10 | செல்லாண்டி அம்மன் கோயில் வடக்கு தெரு- சிமெண்ட் தளம் அமைக்கும் பணி. | 14.00 |
| 7 | 10 | செல்லாண்டி அம்மன் கோயில் வடக்கு தெருவில் வடிகால் அமைக்கும் பணி | 5.00 |
| 8 | 28 | முனிசிபல் காலனியில் வடிகால் அமைக்கும் பணி | 33.50 |
| 9 | 36 | பஜார் குறுக்கு தெரு வெள்ளையப்பர் ராவுத்தர் தெருவில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 14.00 |
| 10 | 36 | சந்தை ரோட்டில் வடிகால் அமைக்கும் பணி | 1.20 |
| 11 | 38 | நேதாஜி நகர் 4 வது தெருவில் வடிகால் அமைக்கும் பணி | 2.70 |
| 12 | 38 | பொன் சீனிவாசன் நகர் 1, 2,3,4, 5, சிவ முருகன் காலனி 1, 2, சிவபெருமாள் நகர் 1, 2, மற்றும் 3 வது தெருவில் சிமெண்ட் தளம் மற்றும் பாலம் கட்டும் பணி | 46.50 |
| 13 | 46 | KMS நகர் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | 31.50 |

**அலுவலக குறிப்பு.**

அ) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்பி திட்ட நிதியில் செய்யவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 1516**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**ஒம்/இளமதி,**
**மாண்புமிகு மேயர்,**
**திண்டுக்கல் மாநகராட்சி**

---

**// உண்மைநகல் //**

**ஆணையர்**
**திண்டுக்கல் மாநகராட்சி.**

# <u>திண்டுக்கல் மாநகராட்சி</u>
# <u>17.10.2024 அன்று நடைபெற்ற சிறப்பு கூட்ட பொருள்களின் தீர்மானங்கள் விபரங்கள்</u>

**1)** திண்டுக்கல் மாநகராட்சி வார்டு – 35 அண்ணா காலனியில் தார் சாலை அபிவிருத்திப் பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.17.20 இலட்சத்திற்கு மாமன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு..</u>**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மான எண். 1517</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

2) திண்டுக்கல் மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 25 குடைபாறைப்பட்டி மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் கழிப்பிடம் கட்டுதல், (RO System) குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் 1 எண்ணம் அமைத்தல் (மோட்டார் பழுது நீக்கம் செய்தல்) மற்றும் சுற்றுச்சுவர் கட்டி கதவு அமைத்தல் ஆகிய பணிகள் செய்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.16.00 லட்சம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மாவட்டத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.08955/2023/இ4

**<u>அலுவலக குறிப்பு..</u>**

(அ) மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ) மதிப்பீடு ரூ. 16.00 இலட்சம் கல்வி நிதியில் இருந்து வழக்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 1518</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

3) திண்டுக்கல் மாநகராட்சியில் வருவாய் நிதி 2023-24 இன் கீழ் நேருஜி நகர் பூங்கா அபிவிருத்திப் பணிக்கு 13.10.2023 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ. எண் | ஒப்பந்தக்காரரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1. | SRINIVASA CONSTRUCTION | மதிப்பீட்டு விலை விகிதம் | ரூ.6000/- மதிப்புள்ள கருவூல செலுத்து சீட்டு நகல் |
| 2. | திரு.எஸ்.அமல்ராஜ் | 0.59% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.6000/- மதிப்புள்ள கருவூல செலுத்து சீட்டு நகல் |

முதல் அழைப்பில் ரூ.6,00,000/- மதிப்பீட்டில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள SRINIVASA CONSTRUCTION, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மற்றும் வேலை உத்திரவு வழங்கியதற்கு ஒப்புதல் அளிக்கலாம்.

(**ந.க.எண். 853 /2023/ இ4)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. SRINIVASA CONSTRUCTION, ஒப்பந்ததாரர் அவர்களின் மதிப்பீட்டு விலை விகிதத்திலேயே அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கு மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**<u>தீர்மான எண். 1519</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

4) திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11, காமராஜபுரம் பகுதியில் சனிஸ்வரன் கோவில் அருகே சிமெண்ட் தளம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.06847/2024/இ4

அலுவலக குறிப்பு..

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பணியினை வருவாய் நிதி 2024-25 இன் கீழ் மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மான எண். 1520</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

5) திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 44 ல் மேட்டுப்பட்டி பகுதியில் உள்ள அலி பாத்திமா தெரு , நேதாஜிசுபாஸ் சந்திரபோஸ் தெரு, சாலை மிகவும் சேதமடைந்து மக்கள் செல்வதற்க்கு சிரமமாக உள்ளது. மேலும் மழைநீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுவதால் அப்பகுதியினை சீர்செய்திட புதிய சாலை அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.9241 /2024/இ4

<u>அலுவலக குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்

2) மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>தீர்மான எண். 1521</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

6) திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் .23 ல் பாறைப்பட்டி பிரதான கால்வாய்கள் உள்ளன மேலும் மழைகாலங்களில் மழைநீர் அனைத்தும் இக் கால்வாய்களில் வழியாக தான் செல்கின்றன. இப் பகுதியில் உள்ள ஆர்.வி.நகர் குடியிருப்பு பகுதியில் மழைநீர் அதிகமாக செல்லும் பொழுது தாழ்வான பகுதிகளில் தண்ணீர் வருகின்றது. எனவே தடுப்பு சுவர் மற்றும் சுற்றுசுவர் அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 9240 /2024/இ4

<u>அலுவலக குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>தீர்மான எண். 1522</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

7) திண்டுக்கல் மாநகராட்சிக்கு சொந்தமான லாரி பேட்டையில் இரண்டு 5MT கொள்ளளவு கொண்ட (Micro Compost Yard) நுண்ணிய உரம் தயாரிக்கும் மையத்தில் கழிவுகளை மக்கும் உரமாக மாற்றும் இயந்திரம் (Shredding cum Sqeezeer) வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ. 21.50 இலட்சம் ஆகும். இதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 1523</u>** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

8) திண்டுக்கல் மாநகராட்சிக்கு விடுபட்ட பகுதிக்கு பாதாள சாக்கடை திட்டம் அமைத்தல், கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம் அமைத்தல் மற்றும் பராமரிப்பு செய்தல் பணிக்கு தமிழ்நாடு தட்பவெப்ப நிலையை தாங்கக்கூடிய நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் (TNCRUDP) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.ஏ2) துறை அரசாணை எண்(எம்.எஸ்) எப்1. நாள். 20.05.2024 ல் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு தட்ப வெப்ப நிலை தாங்க கூடிய நகர்புற வளர்ச்சி திட்டம்.**

| | | |
|---|---|---|
| 1 | Loan from TNUDF - 28% | Rs. 47.94 கோடி |
| 2 | Grant from PSGF - 42% | Rs. 71.92 கோடி |
| 3 | Grant from CGF - 30% | Rs 51.37 கோடி |
| A | Total Project Cost -100% | Rs. 171.23 கோடி |
| 1 | O& M cost for 5 Years | Rs. 37.27 கோடி |
| B | Overall Project Cost | Rs. 208.50 கோடி |

தமிழ் நாடு நகர்புற வளர்ச்சி நிதி (TNUDF) கடிதம் எண் TNUDF/Projects/ TNCRUDS/ Dindigul UGSS நாள். 12.08.2024 ல் கீழ்கண்டவாறு நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

Amount of Loan Rs. 47.94 கோடி

Rate of Interest 8.10 % per annum at half year resets

Principle Moratorium 7 Years

Repayment Period 25 Years

**<u>வீட்டு குழாய் இணைப்புக்காண வைப்பு தொகை மற்றும் மாதாந்திர கட்டணம் விவரங்கள்</u>**

| பரப்பளவு சதுர அடியில் | வைப்புத்தொகை ரூபாயில் | | மாதாந்திர கட்டணம் | |
|---|---|---|---|---|
| | குடியிருப்பு உபயோகம் | வணிக பயன்பாடு | குடியிருப்பு உபயோகம் | வணிக பயன்பாடு |
| < = 600 | 7500 | 15000 | 120 | 360 |
| 601 - 1200 | 10000 | 20,000 | 150 | 450 |
| 1201 - 1800 | 12500 | 25,000 | 180 | 540 |
| 1801 (*) | 15000 | 30,000 | 210 | 630 |

- மேலே குறிப்பிட்ட தொகை 1801 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடகளுக்கான அடிப்படை விலைவிகிதம் ஆகும். 1801 சதுர பரப்பளவினை விட கூடுதலான பரப்பளவு கொண்ட கட்டிடங்களுக்கு, 1801 சதுர அடி பரப்பளவிற்கென நிர்ணயிக்கப்பட்ட தொகையினை அடிப்படையாகக் கொண்டு, விகிதாசார அடிப்படையில் வைப்புத் தொகை மற்றும் கேட்பு நிர்ணயம் செய்யப்படும்.
- பணிநடைமுறைப்படுத்தப்பட்ட ஐந்து ஆண்டுகள் முடிவுற்றப்பின் குடிநீர் இணைப்பிற்கான வைப்புத்தொகை மற்றும் மாதாந்திர கட்டணத்தினை குறைந்த பட்சம் அடிப்படை விலை விகிதத்தில் இருந்து 10 சதவீதம் கூடுதலாகவும், அதன் பின் ஒவ்வொரு ஐந்து வருடத்திற்க்கும் உயர்த்தப்பட்ட வரி

விகித்தில் இருந்து 10 சதவீதம் கூடுதல் தொகை நிர்ணயம் செய்து வசூல் செய்யப்பட வேண்டும்

ந.க.எண். 7695/2023/இ4.

**அலுவலக குறிப்பு.**

(அ) மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ) நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு மாமன்றம் அனுமதிக்கலாம்.

(இ) கடன் தொகை ரூ. 47.94 கோடி திரும்ப செலுத்தவும், தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி நிபந்தனைகளையும், பாதாள சாக்கடை கழிவு நீர் குழாய் இணைப்பிற்க்கான திருத்திய வைப்புத்தொகை மற்றும் மாதாந்திர கட்டணங்களுக்கு அனுமதி உள்ளிட்ட தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதியின் அனைத்து பிற நிபந்தனைகளையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 1524** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

9) திண்டுக்கல் மாநகராட்சி அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் மண்டலம் 2, 10 ல் (வார்டு எண் 2, 3, 9) 24x7 குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு அரசாணை எண் (எம்.எஸ்) 71 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்ஏ2) நாள். 20.05.2024ல் ரூ.9.67 கோடிக்கு கீழ் காணும் நிதி பகிர்மானப்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு தட்ப வெப்ப நிலை தாங்க கூடிய நகர்புற வளர்ச்சி திட்டம்.**

| | | |
|---|---|---|
| 1 | Loan TNUDF (World Bank Assisted TNCRUDP) - 41.06% | Rs. 3.97 கோடி |
| 2 | Grant from GOI under AMRUT 2.0 - 31.02% | Rs. 3.00 கோடி |
| 3 | Grant from GOTN water AMRUT 2.0 - 27.92% | Rs. 2.70 கோடி |
| | Total Project Cost | Rs. 9.67 கோடி |

தமிழ் நாடு நகர்புற வளர்ச்சி நிதி (TNUDF) கடிதம் எண் TNUDF/Projects/ TNCRUDS/ Dindigul 24x7/ws நாள். 12.08.2024 ல் கீழ்கண்டவாறு நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

Amount of Loan Rs. 3.97 கோடி

Rate of Interest 8.10 % per annum at half year resets

Principle Moratorium 7 Years

Repayment Period 25 Years

தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி ரூ. 3.97 கோடி TNUDFல் பெறுவதற்கு வட்டி 8.10 % Per Annum at half Yearly , Principal Moratorium 7 years, Re payment period 25 years என்று நிபந்தனைகள் உள்ளது.

**<u>வீட்டு குழாய் இணைப்புக்கான வைப்பு தொகை மற்றும் மாதாந்திர கட்டணம் விவரங்கள்</u>**

| பரப்பளவு சதுர அடியில் | வைப்புத்தொகை ரூபாயில் | | மாதாந்திர கட்டணம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 10கிலோ லிட்டர் வரை | | கூடுதல் ஒவ்வொரு கிலோ லிட்டர்க்கும் | |
| | குடியிருப்பு உபயோகம் | வணிக பயன்பாடு | குடியிருப்பு உபயோகம் | வணிக பயன்பாடு | குடியிருப்பு உபயோகம் | வணிக பயன்பாடு |
| <600 | 7500 | 15000 | 150 | 450 | 22.50 | 67.50 |
| 601-1200 | 10000 | 20000 | 180 | 540 | 27.00 | 81.00 |
| 1201-1800 | 12500 | 25000 | 210 | 630 | 31.50 | 99.50 |
| 1801 | 15000 | 30000 | 240 | 720 | 36.00 | 108.00 |
| சராசரி | 10928 | 21250 | 191 | 563 | - | - |

- மேலே குறிப்பிட்ட தொகை 1801 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடகளுக்கான அடிப்படை விலைவிகிதம் ஆகும். 1801 சதுர பரப்பளவினை விட கூடுதலான பரப்பளவு கொண்ட கட்டிடங்களுக்கு, 1801 சதுர அடி பரப்பளவிற்கென நிர்ணயிக்கப்பட்ட தொகையினை அடிப்படையாகக் கொண்டு, விகிதாசார அடிப்படையில் வைப்புத் தொகை மற்றும் கேட்பு நிர்ணயம் செய்யப்படும்.
- பணிநடைமுறைப்படுத்தப்பட்ட ஐந்து ஆண்டுகள் முடிவுற்றப்பின் குடிநீர் இணைப்பிற்கான வைப்புத்தொகை மற்றும் மாதாந்திர கட்டணத்தினை குறைந்த பட்சம் அடிப்படை விலை விகிதத்தில் இருந்து 10 சதவீதம் கூடுதலாகவும், அதன் பின் ஒவ்வொரு ஐந்து வருடத்திற்க்கும் உயர்த்தப்பட்ட வரி விகித்தில் இருந்து 10 சதவீதம் கூடுதல் தொகை நிர்ணயம் செய்து வசூல் செய்யப்பட வேண்டும்

ந.க.எண். 7695/2023/இ4.

**<u>அலுவலக குறிப்பு.</u>**

(அ) மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ) நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு மாமன்றம் அனுமதிக்கலாம்.

(இ) கடன் தொகை ரூ. 3.97 கோடி திரும்ப செலுத்தவும், 24x7 குடிநீர் குழாய் இணைப்பிற்க்கான திருத்திய வைப்புத்தொகை மற்றும் மாதாந்திர கட்டணங்களுக்கு அனுமதி உள்ளிட்ட தமிழ்நாடு நகர்புற

வளர்ச்சி நிதியின் அனைத்து பிற நிபந்தனைகளையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 1525** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

10) திண்டுக்கல் மாநகராட்சி புதிய அலுவலக பிரதான வாயில் அருகில் உள்ள லிப்ட் எண் 17572 ல் சிறு பழுதுகள் மேற்கொள்ளுவதற்கு ரூ.54646/- ( 18% GST உட்பட) ம் (AMC) ஒரு வருடத்திற்கான ஆண்டு பராமரிப்பு கட்டணம் ரூ.84724/- ஜான்சஸ் லிஃப்ட் & எக்ஸ்லேட்டர் நிறுவனத்திற்கு முன் பணமாக செலுத்துவதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் என்பதாலும், ஏற்கனவே இந்நிறுவனம் ஆண்டு பராமரிப்பு பணியினை மேற்கொண்டுள்ளதாலும் மொத்தம் முன் பணம் (ரூ54646+ரூ84724) ரூ139370/- த்தினை அந்நிறுவனத்திற்கு செலுத்தவும், அந்நிறுவனத்திற்கு ஒரு வருடத்திற்கான ஆண்டு பராமரிப்பிற்கான பணி உத்தரவு வழங்கவும் மாமன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 8819/2020/இ3)

**அ.குறிப்பு**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண். 1526** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

11) திண்டுக்கல் மாநகராட்சி வார்டு எண் 9 மேற்கு கோவிந்தாபுரம், அண்ணா நினைவு நகரில் உள்ள சாலை மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் உபயோகிக்காத இயலாத நிலையில் உள்ளது. இப்பகுதியில் சிறுபாலம் அமைத்து சிமெண்ட் தளம் அமைக்க ரூ.325000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண். 1527** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

12) திண்டுக்கல் மாநகராட்சியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் (வகை III) மூலதன மான்ய நிதி 2021-22 ன் கீழ் ரூ250.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இப்பணியில் மதிப்பீட்டில் நாற்காலி, மேசை, அலமாரி உள்ளிட்ட மரச் சாமான்கள் வாங்குவதற்கு ரூ.10,00,000/- க்கு வழிவகை செய்யப்பட்டிருந்தது ஆனால் நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களின் கடிதம் ந.க எண் 001/2021/வ.அ.1 நாள் 12.05.2023 ன் படி வகை III க்கு ரூ31.67 இலட்சத்திற்கு மேஜை, நாற்காலிகள், அலமாரிகள் வாங்கி உபயோகப்படுத்த

தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டிருந்த smart class, 5KVA Hybrad Invester, பெயர் பலகை அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் இவ்வனைத்து பணிகளும் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ25.00 இலட்சத்திற்கு மாமன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண். 1528** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

13) திண்டுக்கல் மாநகராட்சி பொதுமக்களின் நலன் கருதி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள கீழ்காணும் மதிப்பீடுகளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | செயின்ட் சேவியர் தெரு வடிகாலில் தடுப்புச் சுவர் கட்டும் பணி | ரூ. 2.50 |
| 2 | பாறை மேடு, ஆனந்த விநாயகர் கோவில் தெரு, உட்புறம் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி | ரூ.10.00 |
| 3 | சிவன் கோவிலில் 1,2 வது தெருவில் தார்தளம் அமைக்கும் பணி | ரூ.3.00 |
| 4 | கச்சேரி தெரு மற்றும் ரெட்டியார் சந்தில் தார்தளம் அமைக்கும் பணி | ரூ.8.00 |

**அ.குறிப்பு**

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண். 1529** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

14) திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் உள்ள பயணியர் நிழற்குடை அதிக அளவு சுவரொட்டி ஒட்டியும் , பராமரிப்பு இன்றியும் உள்ளது. மேலும் புகை வண்டி நிலையம் செல்லும் சாலையில் உள்ள மேம்பாலம் அடியில் முட் கம்பிகளால் வேலி அமைத்தும் சிலவற்றை உடைத்தும் சுவரொட்டிகள் ஒட்டியும் உள்ளது. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடந்த போக்குவரத்து மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு மையம் கோரிக்கையின் நகரை தூய்மையாக்க மாநகரில் உள்ள அனைத்து பயணியர் நிழற்குடை பழுதுபார்க்கவும், வர்ணம் பூசவும் பராமரிப்பு பணிகள் செய்யவும் உத்தேச செலவினம் ரூ. 18.00

லட்சம் மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண். 1530** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

15) திண்டுக்கல் மாநகராட்சியின் வார்டு எண் 5ல் நந்தவனம் சாலை முதல் ஆர்.எம்.காலனி பிரதான சாலை காவல் நிலையம் வரை உள்ள மருதாணிக்குளம் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 180.00 லட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

1.) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2.) இம்மாநகராட்சியின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு இப்பணிகளை ஏதேனும் திட்ட நிதியின் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்பி நிதி ஒதுக்கீடு மானியமாக பெற்று பணி மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1531** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**ஒம்/இளமதி,**
**மாண்புமிகு மேயர்,**
**திண்டுக்கல் மாநகராட்சி**

---

**// உண்மைநகல் //**

**ஆணையர்**
**திண்டுக்கல் மாநகராட்சி**